# பாண்டியர் பெருவழுதி நாணயங்கள்



இரா. கிருஷ்ணமூர்த்தி. எம்.ஏ.

# பாண்டியர் பெருவழுதி நாணயங்கள்

இரா.கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.

முதல் பதிப்பு —டிசம்பர் 1987
உரிமை ஆசிரியருக்கே
விலை ரூ.30.00

நூல் கிடைக்குமிடம்:
இரா.கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.,
161, அண்ணா சாலை,
சென்னை -600 002.

| | | |
|---|---|---|
| Title of the Book | — | **PANDIYAR PERUVALUTHI NANAYANKAL** |
| Author | — | **R.KRISHNAMURTHY M.A.** |
| Language | — | **Tamil** |
| Edition | — | **First** |
| Publisher | — | **R.KRISHNAMURTHY M.A.<br>161, Anna Salai,<br>Madras -2.** |
| Copy right holder | — | **R.KRISHNAMURTHY** |
| Paper used | — | **Map Litho** |
| Size of the book | — | **Demy Octavo** |
| Type point used | — | **10 Point** |
| No of pages | — | **120** |
| Printer | — | REX PRINTERS,<br>233, B.R.K.Mutt Road,<br>Mylapore, Madras-600 004. |

**Price Rs.30/-**



## படையல்

தாய்நாட்டுப் பற்றும், தமிழ் மொழிப்பற்றும் எனக்கூட்டி

வளர்த்த, என் தந்தையார்

'தினமலர்' நிறுவுநர் அமரர்

## டி.வி. இராமசுப்பையர்

திருமுன்

இந்நூலைப் படைக்கிறேன்.

# பொருளடக்கம்


முகவுரை

| | | |
|---|---|---|
| 1. | பாண்டியர் பண்பாடு | 1-4 |
| 2. | சங்ககாலப் பாண்டியர் | 5-7 |
| 3. | பெருவழுதி மன்னர்கள் | 8-12 |
| 4. | பெருவழுதிப் பெயர் நாணயங்கள் | 13-23 |
| 5. | தொட்டி, ஆமை, குதிரை நாணயங்கள் | 24-26 |
| 6. | தொட்டி ஆமை நாணயங்கள் | 27-45 |
| 7. | தொட்டி ஆமை நாணயங்களின் காலம் | 46-48 |
| 8. | ஆமை, கோயில் சின்னங்கள் கொண்ட பெருவழுதி நாணயங்கள் | 49-59 |
| 9. | கோயில் சின்னப் பெருவழுதி நாணயங்களும், அடும்பரா நாணயங்களும் | 60-63 |
| 10. | பெருவழுதி வேள்வி நாணயங்கள் | 64-73 |
| 11. | பெருவழுதித் தலை நாணயங்கள் | 74-83 |
| 12. | பெருவழுதி நாணயங்களின் அச்சடிப்பு முறை | 84-87 |
| 13. | பார்வை நூல்கள் | 88-89 |
| 14. | பெருவழுதி நாணயங்களின் படவிளக்கம் | 90-99 |
| 15. | நாணயங்களின் படங்கள் | I - XIV |

# முகவுரை

ஒரு நாட்டின் வரலாற்றை எழுத இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு, நாணயங்கள் ஆகியவை பெரிதும் உதவுகின்றன. நாணயவியல் ஒரு முக்கியமான ஆய்வுத் துறை. வரலாற்றை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்ற துறை.

நாணயங்களை வெளியிட்ட மன்னர்களின் பெயர்கள், பரம்பரை, அவர்கள் பின்பற்றிய சமயம், அவர்கள் வணங்கிய தெய்வங்கள், அத் தெய்வங்களின் வடிவமைப்புக்கள், ஆட்சி மொழி, அம்மொழியின் வளர்ச்சி, எழுத்து வகை, அதன் வடிவமைப்பு, உள்நாட்டு வாணிக நிலை, வெளிநாட்டு வாணிக நிலை, பெருமளவில் வாணிகம் நடந்த இடங்களை வைத்து மன்னர்களின் ஆட்சிப் பரப்பு ஆகியவற்றை நாணயவியல் கொண்டு அறிய முடியும்.

நான் ஏற்கனவே, எனது 'சங்ககாலச் சோழர் நாணயங்கள்' என்ற நூலின் முன்னுரையில் கூறியுள்ளதைப் போல, தமிழகத்தைப் பொறுத்த வரையில் இந்த முக்கியமான பணியை எந்தப் பல்கலைக் கழகமும் சரியாகச் செய்யவில்லை. தமிழகத்தின் தொன்மை நாணயங்கள், உலகில் சிறப்புடைய பல்வேறு அருங்காட்சியகங்களிலும், நாணயச் சேகரிப்பாளர்களிடமும் சிதறிக் கிடக்கின்றன.

கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக தமிழகத் தொன்மை நாணயங்கள் குறித்து நாட்டின் பல பகுதிகளில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் பல இதழ்களில், பல அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளனர். அக்கட்டுரைகளைத் தேடிக் கண்டுபிடித்து அச் செய்திகளை அறிந்துணர ஓர் ஆய்வாளர் விரும்பினாலும் அஃது அவரால் இயலாத செயலே ஆகும்.

தொன்மையான பாண்டியர் நாணயங்களைப் பொறுத்த வரையில் 1888 ஆம் ஆண்டு லோவன்தால் பாதிரியார் வெளியிட்ட 'திருநெல்வேலி நாணயங்கள்' என்ற நூல் குறிப்பிடத் தக்கது. இந்நூலில் தொன்மையான, பாண்டியரின் செப்பு, சதுர நாணயங்களின் வரைபடங்களை முதன் முதலாக அவர் வெளியிட்டுள்ளார்.

1933 ஆம் ஆண்டு சர்.டி.தேசிகாச்சாரி வெளியிட்ட 'தென் இந்திய நாணயங்கள்' என்ற நூலும் குறிப்பிடத் தக்கது. இந்நூலில் பாண்டியரின் நீள் சதுர நாணயங்கள் பன்னிரண்டு குறித்து அவர் விளக்கம் தந்துள்ளார். அவை அனைத்தும் செம்பால் ஆனவை. அக்காசுகளை அவர் சங்ககால நாணயங்கள் என்று குறிப்பிடாமல் அவை பாண்டியரின் தொன்மையான நாணயங்கள் என்று மட்டும் குறிப்பிட்டுள்ளார்.

தென் இந்திய நாணயங்களை நன்கு ஆய்வு செய்தவர்களில் மைசூர் தொல்பொருள் துறையின் இயக்குநராக இருந்த டாக்டர் எம்.கே.கிருஷ்ணா குறிப்பிடத் தக்கவர் ஆவார். அவர் தென்தமிழ் நாட்டில் கிடைத்த நாணயங்களை ஆய்வு செய்து, பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். அக்கட்டுரைகள் பல இதழ்களில் சிதறிக் கிடப்பதால், அவற்றைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. ஒரேயொரு கட்டுரையைப் பார்க்கும் வாய்ப்புத்தான் கிட்டியது. அதில் அவர் சதுர, நீண்ட சதுரக் காசுகளைப் பற்றியும் அவை சிந்துவெளி நாகரிகத்துடன் தொடர்பு கொண்டவையாக இருக்கக் கூடும் என்ற கருத்தையும் தெரிவித்து இருக்கிறார்.

தொன்மையான பாண்டியர் நாணயங்கள் குறித்து நன்கு ஆய்வு செய்து நூல் வெளியிட்டவர் திரு.புதெல்பு என்ற ஆங்கிலேயராவார். அவரது 'பாண்டியரது நாணயங்கள்' என்ற நூல் 1966 ஆம் ஆண்டு காசியில் உள்ள நாணயவியல் சங்கத்தாரால் வெளியிடப்பட்டு உள்ளது. இந்த நூல் ஓர் அருமையான படைப்பு. அவர் சுமார் முப்பத்தைந்து செப்புச் சதுர நாணயங்கள் குறித்துப் படங்களுடன் விளக்கி எழுதியுள்ளார். இவை அனைத்தும் சங்ககாலப் பாண்டியர் நாணயங்களே ஆகும்.

சேர, சோழ, பாண்டியர் என்னும் தமிழகத் தொன்மை அரச மரபினருள் பாண்டியரே முதன் முதலில் நாணயங்கள் வெளியிட்டனர் என்பது என் கருத்து.

இந்தியாவின் வெள்ளி முத்திரை நாணயங்களைத் தான் தொடக்க கால நாணயங்களாக அறிஞர்கள் கருதுகின்றனர். அவற்றின் காலம் கி.மு.6 ஆம் நூற்றாண்டில் இருந்தோ அதற்குச் சற்று முன்போ தொடங்கி, கி.மு.2 ஆம் நூற்றாண்டு வரை இருந்திருக்க வேண்டும்.

இந்நாணயங்களில் இரண்டு வகைகள் உள்ளன. தொடக்ககால நாணயங்களை ஓர் இன மக்களின் அரசுகள் (Tribal States) வெளியிட்டன. அவ்வகை அரசுகளை 'ஜனபாதங்கள்' என்று அழைத்தனர். இவர்கள் கி.மு.4 ஆம் நூற்றாண்டு வரை வெள்ளி முத்திரை நாணயங்களை வெளியிட்டனர். அவை பலதரப்பட்ட எடைகளிலும், கலைப் பாணியிலும், வடிவமைப்பிலும் மாறுபட்டு இருந்தன. அந்நாணயங்களும் மிக அரிதாகவே கிடைத்துள்ளன. (1)

பாடலிபுத்திரத்தில் தோன்றிய மகத அரசு, அதற்கு முன் பல சிற்றரசுகள் வெளியிட்ட நாணயங்களை விட எடையைக் கூட்டிப் புதிய வகை நாணயங்களை வெளியிட்டது. அவ்வகை நாணயங்களை மகதப் பேரரசும் அவர்களுக்குப் பின் தோன்றிய நந்தப் பேரரசும், மௌரியப் பேரரசும் முன்மாதிரியாகக் கொண்டன. இந்நாணயங்களைப் பணம் என்றும், பிற்காலத்தில் கர்ஷப்பணம் என்றும் மக்கள் வழங்கினர்.

'கர்ஷப்பணம்' என்று அழைக்கப்படும் வெள்ளி முத்திரை நாண யங்களின் ஒரு பக்கத்தில் ஐந்து முத்திரைகள் இருக்கும். அவற்றின் எடை சுமார் 3.4 கிராம். நந்தர்களும், மௌரியர்களும் இந்தியாவின் பெரும் பகுதிகளை நீண்ட காலம் ஆட்சி செய்ததினால் அவர்களது கர்ஷப்பணம், சுமார் 400 ஆண்டுக் காலம் இந்தியாவின் வெள்ளி நாணயமாக வழக்கில் இருந்தது. [2]

இந்த வகை நாணயங்களைப் போன்று ஐந்து முத்திரை கொண்ட நாணயங்களைத் தொன்மைக் காலத்தில் பாண்டிய மன்னர்கள் வெளி யிட்டனர். அவற்றின் முன் பக்கத்தில் கதிரவனும், ஆறு கிளைச் சின்ன மும், வேறு பல சின்னங்களும் உள்ளன. பின்புறத்தில் பாண்டியரின் மீன் சின்னங்கள் தவறாது காணப்படுகின்றன.

இந்நாணயங்கள் இந்நூல் ஆசிரியரின் நாணயத் தொகுப்பில் உள் ளவை. இந்நாணயங்களைப் பார்வையிட்ட டாக்டர் பி.எல்.குப்தா இந்நாணயங்கள், தனித்தன்மை வாய்ந்தவை என்றும் இவை மௌரி யரின் இறுதிக் காலத்தைச் சார்ந்தவை என்றும் கூறியுள்ளார். அவரின் காலக் கணிப்புப்படி இந்நாணயங்களின் காலம் கி.மு.2 ஆம் நூற் றாண்டாகும்.

இவை போன்ற வெள்ளி முத்திரை நாணயங்களைச் சங்ககாலச் சோழர்களோ, சேரர்களோ வெளியிட்டதாக இதுவரையில் தெரிய வில்லை. இதுகாறும் கிடைத்த நாணயச் சான்றுகளின் படி பாண்டி யரே மூத்த குடியினராக இருக்க வேண்டும் என நான் எண்ணுகிறேன்.

சங்ககாலப் பாண்டிய மன்னர்களின் பின்னடைகள் வழுதி, மாறன், செழியன் என்பவையாகும். இப்பெயர்கள் பாண்டியர்களுடைய வெவ் வேறு கிளைக் குடிகளை உணர்த்துகின்றன என்று எண்ணத் தோன்று கிறது.

பெருவழுதி என்ற பெயருள்ள நாணயங்கள் கிடைத்துள்ளதால் அவற்றை வழுதி கிளையைச் சார்ந்த அரசர்கள் வெளியிட்ட நாண யங்களாகக் கொள்வதில் தவறில்லை.

இதே நிலையில் மாறன், செழியன் என்ற பெயருள்ள நாணயங்க ளும் எதிர்காலத்தில் கிடைக்கின்ற வாய்ப்பும் இல்லாமல் இல்லை.

இந்நூல் வெளிவர உதவிய நண்பர் திரு.தமிழப்பனுக்கும், ஓவியர் திரு.இராஜாவிற்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

சென்னை.
25.10.87

**இரா. கிருஷ்ணமூர்த்தி**

---

1. Gupta P.L. and Hardaker T.R. Ancient Indian silver punch marked coins of Magada -Maurya -Karshapana Series -Page. 1

2. Gupta P.L. and Hardaker T.R. Ancient Indian silver punch marked coins of Magada -Maurya -Karshapana Series -Page. 1

# 1. பாண்டியர் பண்பாடு

தமிழகத்தின் பழம் பெரும் அரச மரபினரான மூவருள், பாண்டியரே மிகத் தொன்மையானவர். மிக நீண்ட நெடுங்காலம் ஆட்சி செய்தவரும் அவரே ஆவர்.

பாண்டியர் ஆட்சி கி.மு.3 ஆம் நூற்றாண்டிலோ, அதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்னரோ தொடங்கி இருக்கலாம். இடையில் ஏற்பட்ட களப்பிரரின் ஆட்சிக்காலம் தவிர்த்து இடைவிடாமல் 10 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்துள்ளனர்.

கி.பி.10ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர்கள் சோழர் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தனர். கி.பி.1219 ஆம் ஆண்டு மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்ற பர்ண்டியன், சோழர்களுடன் போர் செய்து, வெற்றி கொண்டு, பாண்டிய மண்டலத்தைக் கைப்பற்றினான். பிறகு சோழ மண்டலத்தையும் தன் ஆட்சிக்குடையின்கீழ்க்கொணர்ந்தான். இவன் வழிவந்தவர்கள், 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழ மண்டலம், தொண்டைமண்டலம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றித் தங்களது ஆதிக்கத்தை நெல்லூர் வரையிலும் பரவச் செய்தனர்.

14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய நாடு சிறிது காலம் சுல்தான் ஆட்சிக்குட்பட்டு, பிறகு விசயநகர ஆட்சியின் கீழ் வந்தது. இக்காலக் கட்டத்தில் கூட பாண்டியர் தங்களது தலைநகரைத் திருநெல்வேலிக்கு மாற்றிக் கொண்டு தொடர்ந்து ஆட்சி புரிந்தனர். உலக வரலாற்றில் இவ்வளவு நீண்ட காலம் தொடர்ந்து ஆட்சி செய்த பிற அரச மரபினரைக் காண்பது அரிதாகவே உள்ளது.

பாண்டிய மரபினரின் தோற்றத்தைக் குறித்து மேலைநாட்டு அறிஞர்கள் அண்மைக் காலங்களில் வெளியிட்டுள்ள கருத்துக்களைக் காண்போம்.

முதற்கண் கிளாரன்ஸ் மலோனி[1] என்ற அறிஞரின் கூற்றினை ஆராய்வோம்.

"தொன்மைக் காலத்தில் கடல்வழி வணிகம் கடற்கரை ஓரமாகவே நடந்தது. அவ்வாணிகம் சிந்து மாநிலத்தின் கடற்கரைப் பகுதியில் இருந்து தொடங்கி, குஜராத் மாநிலக் கடற்கரை வழியாக மன்னார் வளைகுடாப் பகுதிக்கு வந்திருக்க வேண்டும். மன்னார் வளைகுடாப் பகுதியில் கிடைத்த முத்தையே இந்த வாணிகத்திற்குத் தலையாய காரணமாகக் கொள்ள வேண்டும். இவ்வாணிகத்தின் காரணமாகத் தென் பாண்டியக் கடற்கரைப் பகுதி மக்களுடனும், இலங்கையின் வட பகுதியில் வாழ்ந்த மக்களுடனும் அந்த வணிகர்களுக்கு தொடர்பு ஏற்பட்டது. பாண்டியர் ஆட்சியும், அவர்களது பண்பாடும் இந்த வாணிகத் தொடர்பினால் வளர்ச்சியுற்றது."

---

1. Clarence Maloney - The beginings of Civilisation in South India - The Journal of Asian Studies -29: 603 -616 —May, 1970.

''மௌரியர் ஆட்சிக் காலத்தில் ஈழைக் கடற்கரை வணிகர்கள் மன்னார் வளைகுடாப் பகுதிக்கு வந்து முத்தை வாங்கிச் சென்றனர். கி.மு.2 ஆம் நூற்றாண்டில், இந்த முத்து ஆந்திர நாட்டிற்கும் சென்றிருக்க வேண்டும். கிருஷ்ணா நதியின் முகப்பில் இருந்த பட்டிபேருலு என்ற ஊரில் புத்த விஹாரம் ஒன்றிருந்தது. அந்த விஹாரத்தில் கண்டெடுக்கப்பட்ட பேழையில் 62 நல்முத்துக்கள் இருந்ததே இந்த வாணிகத்திற்குச் சான்றாக அமையும்.

பாண்டிய நாட்டிற்கும், இலங்கைக்கும் இடையில் உள்ள கடற்பகுதியில் முத்தைத் தவிர அழகிய சங்கு வகைகளும் ஏராளமாகக் கிடைத்துள்ளன. கௌடில்லியர் தன் ''அர்த்த சாத்திரத்தில்'' தென்னாட்டில் இருந்து கிடைத்த பொருட்களில் சங்கையே முதன்மையாகக் குறிப்பிட்டுள்ளார்.

வாணிகத்தின் மூலமாகத் தான் தமிழ்ப் பண்பாடு பரவியதற்கு வேறு அடிப்படைச் சான்றுகளும் உள்ளன. குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள பிராமிக் கல்வெட்டுக்களை வரிசைப்படுத்தினால் அவை பெருமளவில் தென் தமிழ்நாட்டில் தான் கிடைத்துள்ளன. அவை பெரும்பாலும் திருநெல்வேலிக்கும், புதுக்கோட்டைக்கும் இடைப்பட்ட பகுதியில் தான் உள்ளன. குறிப்பாக மதுரையைச் சுற்றித்தான் மிகுதியும் காணப்படுகின்றன. இதிலிருந்து தமிழ்நாட்டின் தென் பகுதியில் இருந்து தான் தமிழ்க் கல்வியும், பண்பாடும் வளர்ந்து வட பகுதிக்குச் சென்றிருக்க வேண்டும் என்ற கருத்து வலுப் பெறுகிறது.

இக்கல்வெட்டுக்களில் வணிகர்களின் பெயர்களும் உள்ளன. மதுரையின் வடக்கேயுள்ள அழகர்மலைக் கல்வெட்டுக்களில், பொன், எண்ணெய் வணிகர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

பாண்டிச்சேரி அருகிலுள்ள அரிக்கமேட்டு அகழ்வாயில் கிடைத்த பானை ஓடுகளில் பிராமி எழுத்துச் சொற்றொடர்களுடன் சில குறியீடுகளும் உள்ளன: அக்குறியீடுகள் வணிகர்கள் பயன்படுத்திய குறியீடுகளாகத் தான் தோன்றுகின்றன. இந்தச் சான்றுகளுடன் நோக்கினால், வாணிகமே பெரும்பாலும் தென் பாண்டிய நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் பண்பாட்டுப் பரிமாற்றம் ஏற்படக் காரணமாக இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது. மேலும் தென் தமிழ்நாட்டில் உள்ள பிராமி எழுத்துக்கள் இந்தியாவின் மேற்குப் பகுதி எழுத்து வகையை ஒத்திருக்கின்றன. எனவே இவ்வெழுத்து முறை வணிகர்கள் மூலமாகத்தான் வடமேற்கில் இருந்து தமிழகத்திற்குப் பரவி இருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது.

இதே நிலையில் இலங்கையை எடுத்துக் கொண்டால், இலங்கை அனுராதபுரத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் தமிழ் வணிகர்களின் பெயர்கள் உள்ளன. அவ்வணிகர்கள் மரக் கலங்கள் மூலமாகச் சரக்குகளை ஏற்றுமதி செய்பவர்களாகவும், குதிரைகளை இறக்குமதி செய்பவர்களாகவும் இருந்திருக்கின்றனர். இக்கல்வெட்டின் காலம் கி.மு.2 ஆம் நூற்றாண்டாகும். இதே காலத்தைச் சார்ந்த மதுரைக்கு

அருகில் உள்ள திருப்பரங்குன்றக் கல்வெட்டில் 'ஈழக்குடும்பிகன்' என்ற சொல் காணப்படுகிறது. சங்க இலக்கியத்தில் 'ஈழத்துப்பூதன் தேவனார்', 'ஈழம் போதியார்' என்பனவாகிய சொற்களும் காணப்படு கின்றன.

இக்காரணங்களினால் அத்தொன்மைக் காலத்தில் இலங்கைக்கும், தென் தமிழ்நாட்டிற்கும் தொடர்பு இருந்தது என்பதும், இதனால் பண்பாட்டுப் பரிமாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதும் உறுதிப் படுகின்றன. வட புலத்தில் இருந்து நில வழியே பண்பாட்டுப் பரிமாற் றம் ஏற்பட்டது என்று கொள்வதை விடக் கடல் வழியாக வாணிகத் தின் மூலமே பரிமாற்றம் ஏற்பட்டது என்று கொள்வதே பொருத் தமாக உள்ளது. இப்பண்பாட்டுப் பரிமாற்றம், தென் தமிழ் நாட்டிற் கும், இலங்கைக்கும் பரவிய பின் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் பரவியிருக்க வேண்டும்."

மேலே கூறப்பட்டுள்ள கிளாரன்ஸ் மலோனியின் கருத்தை அறி ஞர்கள் பலர் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழகத்துடன் நீண்ட காலம் தொடர்பு கொண்ட அறிஞர் கமில் வி.செவலபில் (1) கருத்தைக் காண்போம்.

"திராவிடப் பண்பாடு, முதன்முதலாக இலங்கைக்கும் இந்தியாவுக் கும் இடைப்பட்ட மன்னார் வளைகுடாவின் இரு மருங்கிலும் உள்ள கரைப் பகுதிகளில் தான் தோன்றி இருக்க வேண்டும். இங்குத் தோன் றிய திராவிடர் பண்பாடு என்பது பழந்தமிழரின் பண்பாட்டைத் தான் குறிக்கும்.

இப்பகுதியில் தோன்றிய பண்பாடு பிறகு இந்திய -திராவிடப் பண் பாடாக வளர்ச்சி பெற்றது. அந்தப் பண்பாட்டின் காலத்தைக் கி.மு.600 முதல் கி.மு.300 வரையுள்ள காலமாகக் கொள்ளலாம். பாண்டியர்களுக்கு இப்பண்பாட்டு வளர்ச்சியில் பெரும்பங்கு உண்டு.

இந்தியப் பண்பாட்டின் முழுமையான வளர்ச்சிக்கு இரண்டு பகு திகள் அடிப்படையானவை. தமிழகச் சமவெளிப் பகுதி ஒரு பண் பாட்டு மையமாகத் திகழ்ந்தது. மற்றொரு மையம் மத்திய கங்கைச் சம வெளிப் பகுதியாகும்.

தமிழகம் இந்து -திராவிடப் பண்பாட்டின் மையமாகவும், மத்திய கங்கைச் சமவெளி இந்து -ஆரியப் பண்பாட்டு மையமாகவும் திகழ்ந் தன. இந்து -திராவிடப் பண்பாட்டு மையம் தென்தமிழ் நாட்டின் கிழைக் கடற்கரையில் தோன்றியது.

சிந்துக் கடற்கரைப் பகுதிகளில் இருந்தும், குஜராத் கடற்கரைப் பகு திகளில் இருந்தும் கடல் வழிச் சென்ற வணிகர்களினால் பாண்டிய அர

1. Kamil. V.Svelabil —Journal of Tamil Studies -Vol. 23. June, 83.

கம், அதன் பண்பாடும் வளம் பெற்றன என்று கிளாரன்ஸ் மலோனி கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் பாண்டியரின் அரசு தான் திராவிடப் பண்பாட்டின் மையமாக விளங்கியது என்பதை ஏற்றுக் கொள்ளலாம். மேலும் இப்பகுதிதான் தொன்மையான இந்திய திராவிடப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு மையமாக விளங்கியது என்ற கிளாரன்ஸ் மலோனியின் கருத்தை மட்டும் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

தாமிரபருணிநதியின் முகப்புப் பகுதியும், முருகன் வீற்றிருக்கும் திருச் செந்தூர் கோயிலும் இப்பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரும் துணை புரிந்தன.

தமிழ் இலக்கியங்கள் கூறும் தென் மதுரை, கபாடபுரம், வட மதுரை ஆகியவை கட்டுக் கதைகள் அல்ல. தென் மதுரை தற்பொழுது கொற்கை என்று அழைக்கப்படும் சிற்றூரின் அருகே இருந்திருக்க லாம். கடற் கொந்தளிப்பின் காரணமாக கி.மு.800க்கும் கி.மு.500க் கும் இடைப்பட்ட காலத்தில் அந்நகர் அழிந்து போயிருக்கலாம்.

தொன்மையான வடமொழி நூல்களில் கபாடபுரத்தைப் பற்றிய குறிப்புக்கள் ஏராளம் உள்ளன. கி.மு.3 ஆம் நூற்றாண்டில் பாண்டியர் தங்கள் தலைநகரைக் கபாடபுரத்தில் இருந்து மதுரைக்கு மாற்றி இருக்கலாம். இலங்கையில் இருந்து வந்த படையெடுப்பைத் தடுக்கவே இந்த மாற்றம் ஏற்பட்டு இருக்க வேண்டும்.

இக்காலக் கட்டத்தில் பாண்டியர்கள், தமிழ் மொழிக்குப்பிராமி எழுத்து முறையை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். அதன் கார ணமாக மதுரையைச் சுற்றி பலகுகைத் தளக் கல்வெட்டுக்கள் பிராமி எழுத்தில் வெட்டப்பட்டு உள்ளன. இத்தருணத்தில் நிர்வாக முறைகள், ராணுவம், ஆட்சிக்குழு, நிலையான ஆட்சி ஆகியவை ஏற் பட்டு இருக்க வேண்டும்.

இவ்வாறு கமில். வி.செவலபில் கருதுகிறார். கிரேக்க ஆசிரியர் மெகஸ்தனிஸ் எழுதிய 'இண்டிகா' என்னும் நூலில் பாண்டியரைப் பற்றிய சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. பண்டைய கிரேக்க, உரோமானிய ஆசிரியர்களான பிளைனி [(1)], தாலமி [(2)] ஆகியோரின் குறிப்புக்களில் தமிழகத்தில் இருந்த துறைமுகப்பட்டினங்கள், மூதூர்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

பண்டைய கிரேக்க நூலான 'செங்கடல் விவரத்தொகுதி' [(3)]-யின் குறிப்புக்களும், பாண்டிய நாட்டின் வரலாற்றுக்குப் பயனுள்ள வையாக அமைந்துள்ளன.

---

1. Pliny -Natural History, VI 17, 23.
2. Ptolemy —Treatise on Geography VII 1—10-11, 1.13.1.
3. Periplus of the Erythraean Sea.

கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட இக்குறிப்புகளில் பாண்டியரைப்பற்றியும், தலைநகர் மதுரை, துறைமுகம் கொற்கை, புனிதத்தலம் குமரி இவை பற்றியும், உரோமானியர்களுடன் நடைபெற்ற வணிகத்தைப்பற்றியும், குறிப்புக்கள் காணப்படுகின்றன.

மேலே கூறப்பட்ட பண்பாட்டுப்பரவல் சங்ககாலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுக்காலத்தைச் சார்ந்தவை.

சங்க காலத்திலும், வெளிநாட்டு வணிகம் சிறப்புடன் நடந்தது. அதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.பண்டமாற்று முறை மட்டுமின்றி வணிகத்திற்கு நாணயங்களைப் பயன்படுத்தினர் என்பது உறுதியாகிவிட்டது. சங்க காலச்செப்பு நாணயங்கள் கிடைத்திருப்பினும், பொன், வெள்ளி நாணயங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

இப்பொழுது சங்ககாலப் பாண்டிய மன்னர்களின் பெருவழுதிப் பெயர் பொறிப்பு நாணயங்கள் கிடைத்துள்ளதால் அந்நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு பெருவழுதி மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களை வரிசைப்படுத்தவும், ஆட்சிக் காலத்தை உறுதி செய்யவும் அதற்கான ஆய்வு முயற்சியில் ஈடுபடுவோம்.

# 2. சங்க காலப் பாண்டியர்

*சேர, சோழ, பாண்டிய மன்னர் மூவரையும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. காத்தியாயனர் கி.மு. நான்காம் நூற்றாண்டிலேயே சோழரைப் பற்றியும், பாண்டியரைப் பற்றியும் எழுதியுள்ளார். இம்மன்னரைப் பற்றிய குறிப்புக்கள் ஹதீகும்பா கல்வெட்டுக்களிலும் (கி.மு. 3 ஆம் நூற்றாண்டு) வருகின்றன. (1)*

*பாண்டியரைப் பற்றிய குறிப்புக்கள் பேரரசன் அசோகனது 3, 14 பாறைக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன.*

*சங்க காலப் பாண்டியரைப் பற்றிய செய்திகள் நற்றிணை, புறநானூறு, பரிபாடல், திருமுருகாற்றுப்படை, மதுரைக் காஞ்சி ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளன. மொத்தம் 20 மன்னர்களின் பெயரைக் காணமுடிகிறது.*

வடிம்பலம்ப நின்ற பாண்டியுன்
பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி
முடத்திருமாறன்
கடலுண் மாய்ந்த இளம் பெருவழுதி
அறிவுடைநம்பி
ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்
தலையானங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்
கானப் பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி

*ஆகிய பதின்மரைப் பற்றிய பல குறிப்புக்களும்*

பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி
கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி
இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்

*ஆகிய மூவரைப் பற்றிய சில குறிப்புக்களும்*

மதிவாணன்
பொற்கைப் பாண்டியன்
கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதி
பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி
நல்வழுதி

---

*(1) டாக்டர் கே.கே.பிள்ளை*
*தமிழக வரலாறும் பண்பாடும் பக்: 97.*

குறுவழுதி
நம்பி நெடுஞ்செழியன்

ஆகிய எழுவரைப் பற்றிய குறிப்புக்களும் மேற்குறித்த சங்க நூல்களில் பரவலாகக் காணப்படுகின்றன. [1]

இவற்றிலிருந்து பாண்டியர் பழம்பெரும் மரபினர் என்பதும், சங்க காலத்திலேயே மிகச் சிறந்த மன்னர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர் என்பதும் தெரிய வருகிறது.

---

1 டாக்டர் கே.வி.இராமன்
பாண்டியர் வரலாறு பக்: 47-48.

# 3. பெருவழுதி மன்னர்கள்

வழுதி, பாண்டியரின் பட்டப் பெயர்களுள் ஒன்று. பெருவழுதி அவருள் சிறந்தாரைக் குறிப்பது. அத்தகைய நால்வரைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் விரித்துப் பேசுகின்றன. இறந்த முறையும், சிறந்த செயலும் அவர்களுக்கு அடைமொழிகளாக அமைந்தன.

## 1) பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி:

பல்யாகசாலை என்ற அடைமொழி பல யாகங்களை அமைத்துத் தந்தவன் அல்லது அமைக்க உதவியவன் என்ற பொருளைத் தருகிறது.

வேள்விக் குடிச் செப்பேடுகள் இதற்குச் சான்றாக நின்று உதவுகின்றன. *(1)*

குடுமி என்பதை இயற்பெயராகச் சிலர் கொள்கின்றனர். சங்கப் புலவர்கள் குடுமி என விளித்திருப்பதால் அவர்கள் அவ்வாறு கருதுகின்றனர்.

இவனைக் காரிகிழார், நெட்டிமையார், நெடும் பல்லியத்தனார் ஆகிய மூன்று பெரும் புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். இந்த மூவரும் சங்ககாலப் பிற மன்னர்களைப் பற்றி வாய் திறக்கவே இல்லை. இதிலிருந்து பெருவழுதி மன்னர்களில் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியே காலத்தால் மூத்தவன் என்ற கருத்து வலுப்படுகிறது. இந்த முப்பெரும் புலவர்கள் காலத்திலும் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் போன்ற புகழ்மிக்க அரசர்கள் வாழ்ந்திருக்கவில்லை என்பதும், அவ்வாறு அவர்கள் வாழ்ந்திருப்பார்களேயானால், இப்புலவர் பெருமக்கள் அவர்களைப் பாராட்டிப் பாடாது இருந்திருக்க மாட்டார்கள் என்பதும், இந்தப் பெருவழுதி தன் பெயருக்கேற்பவே 'யாண்டு பலவாக நரையிலனாகி' நீண்ட நெடுங்காலம் வாழ்ந்தவன் என்பதும் பெறப்படுகின்றன.

---

*(1)* *கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாம் தவிர்த்த*
*பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியெனும் பாண்டியாதி ராசனால்*
*நாகமா மலர்ச்சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும்*
*பாகனூர்க் கூற்றமெனும் பழனக்கிடக்கை நீர்நாட்டுச்*
*சொற்கணாளர் சொலப்பட்ட சுருதிமார்க்கம் பிழையாத*
*கொற்கை கிழா னற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்கக்*
*கேள்வியந்த ணாளர்முன்பு கேட்கவென் றெடுத்துரைத்து*
*வேள்விச்சாலை முன்பு நின்று வேள்விக் குடியென் றப்பதியைச்*
*சீரோடு திருவளரச் செய்தார் வேந்த னப்பொழுதே*
*நீரோட்டிக் கொடுத்தமையால்`......... வேள்விக்குடிச் செப்பேடுகள்*

இம்மூன்று புலவோரும் முதுகுடுமிப் பெருவழுதியின் கொடைத்திறம் பற்றியும், படைத்திறம் பற்றியும் ஒரே குரலில் பாராட்டுகின்றனர். (1) இவனது 'படையறம்' பற்றிய 'எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின்' என்ற பாடலை நெட்டிமையார் பாடியுள்ளார். (2)

இவன் வாழ்ந்த காலம் பற்றி ஒருமித்த கருத்து வரலாற்று ஆசிரியர்களிடையே இல்லை.

களபபிரர் இடையீட்டுக்கு முன்பிருந்த பாண்டியவேந்தன் என்பது வேள்விக்குடிச் செப்பேடுகளிலிருந்து தெரிய வருகிறது. மேலும் மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக் காஞ்சியுள் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்கும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கும் முன்னர் வைக்கப்பட்டுள்ளான். மேலும் வடநாட்டு வேத வேள்விகள் முதுகுடுமியின் காலத்தில் அதிக அளவில் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுவதில் இருந்து வடநாட்டுத் தொடர்பு நெருக்கமடைந்த காலத்தில் வாழ்ந்தவன் ஆகலாம் என்பது உறுதிப்படுகிறது. ஆயினும் களப்பிரர் இடையீட்டுக்கு எத்தனை ஆண்டுகள் முன்பிருந்து ஆண்டான் என அறிவதற்கான சான்றுகள் ஏதுமில்லை. (3)

இருப்பினும் சங்ககாலப் பாண்டியருள் முதுகுடுமிப் பெருவழுதி மூத்த நிலையுடையவன் என்பதை மறுப்பார் யாருமில்லை.

பாண்டிய அரசர்களில் ஒருவன் அசுவமேதயாகம் செய்து முடிக்கின்றபோது அகத்திய முனிவர் அவனிடம் வந்து அவனை ஆசிர்வதித்ததாக மகாகவி காளிதாசன் தன் இரகுவம்சத்தில் கூறுகின்றான்.

'ஓதமீள வேலெறிந்து மோராயிரங் கிரதுச் செய்தும்' என்று சின்னமனூர்ச் செப்பேடு குறிக்கிறது.

---

(1)புறம் 6, 9, 12, 15, 64.

(2)புறம் 9.

(3) டாக்டர் கே.வி.இராமன்
பாண்டியர் வரலாறு பக்: 43.

இம்முதுகுடுமிப் பெருவழுதியைப் பாட வந்த நெட்டிமையாரும்

நற்பனுவ னால் வேதத்
தருஞ்சீர்த்திப் பெருங் கண்ணுறை
நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன் களம் பல கொல் (1)

என வியந்து நிற்கிறார்!

மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனார் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பற்றிப் பாடும்போது அவனை,

'பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறை போகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்'

என முதுகுடுமிப் பெருவழுதியின் வழி வந்த சிறப்புடையவன் எனக் கூறிப் பாராட்டுகின்றார்.

முதுகுடுமிப் பெருவழுதிக்கு முந்திய பாண்டிய மன்னர் வேள்வி செய்த நிலையும் இவன் செய்த வேள்வியின் சிறப்பைப் பின் வந்த பாண்டிய மன்னரும் சிறப்பாய் எண்ணி மகிழ்ந்த செய்தியும் இதனால் நமக்குத் தெரிய வருகின்றன.

## 2) கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி:

இவனைப் பற்றிய பாடல்கள் ஏதுமில்லை. இவன் பெயரை வைத்தும் இவன் பாடிய பாடல்களை வைத்தும் (2) ஓரளவே இவனைப் பற்றி அறிய முடிகிறது.

'கடலுண் மாய்ந்த' என்ற பெயரடையால் கடலின் மீது பகைவரொடு போர் செய்யுங் காலத்தோ பிற காரணத்தாலோ இவன் இறந்திருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது.

'உண்டாலம்ம' எனத் தொடங்கும் இவனது புறப்பாட்டும், பரிபாடலும், நற்றிணைப் பாடல்களும் இவனது புறவயக்

(1) புறம் 15.

(2) புறம் 182; பரி 15; நற் 55, 56.

கோட்பாடுகளையும், அகவயக் கோட்பாடுகளையும், காதலறக் கோட்பாடுகளையும் இனிதே நமக்கு எடுத்தியம்புகின்றன.

## 3) கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி:

*இவனை ஐயூர் மூலங்கிழாரும் (1), ஔவையாரும் (2) பாடியுள்ளனர்.*

இப்பெருவழுதி பாண்டி வேந்தருள் பழையோருள் ஒருவன். இவன் காலத்து ஏனை முடிவேந்தரான சேரமான் மாரி வெண்கோவும், சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் இவற்கு நண்பராயிருந்தனர். ஒரு காலத்து இம்மூவரும் ஒருங்கிருந்த காட்சி கண்டு ஔவையார் மகிழ்ந்து பாடியுள்ளார். அகநானூற்றைத் தொகுப்பித்தோன் இவனே என்பர். இவன் முன்பே திருவள்ளுவரது திருக்குறள் அரங்கேற்றப்பட்டது என்றும் கூறுப. கானப்பேர் என்பது இப்போது காளையார் கோயிலென வழங்குகிறது. இது பாண்டி நாட்டிலுள்ளது. இவன் காலத்தே இது வேங்கை மார்பன் என்னும் குறுநில மன்னற்குரியதாய் நல்ல அரணமைந்து விளங்கிற்று. இவன் அம்மன்னனை வென்று அக்கானப்பேரெயிலைத் தனக்குரித்தாகக் கொண்டான். அதனாற்றான் இவற்குக் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி எனப் பெயர் வழங்குகிறது. (3)

இவன் பாடியனவாக அகத்தில் ஒன்றும் (4), நற்றிணையில் ஒன்றும் (5), திருவள்ளுவ மாலையில் ஒன்றுமாக மூன்று பாடல்கள் காணப்படுகின்றன.

'பல்லி சகுனம் பார்க்கும் பன்றியைப்' பற்றி இவனது நற்றிணைப் பாடல் எடுத்துக் கூறுகிறது.

இவன் சங்ககாலப் பாண்டி மன்னர்களுள் கடைசி அரசனாகக் கருதப்படுபவன். இவன் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் மகன் என்றும் கருதுவர். (6)

---

(1) புறம் 21
(2) புறம் 367

(3) அவ்வை சு.துரைசாமிப்பிள்ளை புறம் 21 -முன்னுரை.
(4) அகம் 26.
(5) நற் 98.

(6) டாக்டர் கே.வி.இராமன்
பாண்டியர் வரலாறு பக்: 47.

## 4) வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி:

இவனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்ற புலவர் சிறப்பித்துப் பாடியுள்ளார். (1) இவன் பெயரிலிருந்து இவன் இறந்த இடமும், இவனைப் பற்றிய பாட்டிலிருந்து இவன் இளமையிலேயே பகைவருடன் போருடற்றிய செய்தியும், பின்னாளில் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவனுடன் இறுகிய நட்புக் கொண்டு வாழ்ந்தவன் என்பதும் புலப்பட்டு நிற்கின்றன.

இதுவரை கூறியவற்றான் சங்க காலத்தில் வாழ்ந்த பெருவழுதி மன்னர்களுள் வேள்வி செய்த புகழுடையவன் முதுகுடுமிப் பெருவழுதி ஒருவனே என்ற கருத்து வெளிப்பட்டு நிற்கிறது.

---

1 புறம் 58.

# 4. பெருவழுதிப் பெயர் நாணயங்கள்

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பாண்டிய மரபில் தொன்மையானவன் என்பதையும், பெருவழுதி மன்னர் பலர் இருந்தமை குறித்தும் சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன என்பதை முன்னரே கண்டோம்.

சங்ககாலச் செப்பேடுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. மதுரை மாவட்ட மாங்குளத்தில் உள்ள குகைத் தளத்தில் கடலன் வழுத்தி என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு மட்டும் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டைத் தவிர வழுதி பரம்பரையைக் குறிக்க வேறு எந்தச் சான்றும் இதுவரை கிடைக்கவில்லை.


[1]

மதுரை மாவட்ட மாங்குளக் குகைத்தள தமிழ் -பிராமி கல்வெட்டு.



கடலன் வழுத்தி.

1 Iravatham Mahadevan —Corpus of the Tamil -Brahmi Inscriptions —page 69. Seminar on Inscriptions -1966.

# தமிழ் -பிராமி எழுத்துக்கள் Tamil -Brahmi Script

## உயிர் எழுத்துக்கள் Vowels




## மெய் எழுத்துக்கள் consonants




## உயிர்மெய் எழுத்துக்கள் vowelled consonants




Iravatham Mahadevan -Corpus of Tamil -Brahmi Inscriptions -Seminar on Inscriptions - 1966. -page.57.

*1985* ஆம் ஆண்டில் பெருவழுதி என்ற பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்கள் சில இந்நூலாசிரியருக்குக் கிடைத்தன. அதே ஆண்டில் காசியில் நடந்த இந்திய நாணயவியல் மாநாட்டில் அது குறித்த கட்டுரை ஒன்றும் படிக்கப்பட்டு உள்ளது. அக்கட்டுரை இந்திய நாணயவியல் சங்க ஆண்டு மலரில் (1985) வெளிவந்து உள்ளது.

அந்நாணயமே பெருவழுதி மன்னர்களின் கால ஆய்விற்கு அரியதோர் ஊன்றுகோலாக உதவி நிற்கிறது. பெருவழுதி என்ற பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்களின் விளக்கம் வருமாறு:

நாணயம்: 1

| முன்புறம் | பின்புறம் |
|---|---|
| புகைப்படம் | |
|  |  |
| வரைபடம் | |
|  |  |

*செப்பு நாணயம்: நீளம்: 1.7 செ.மீ. அகலம்: 1.7 செ.மீ. எடை: 4.100 கிராம்*

இந்த நாணயத்தின் முன்புறம் இடப்புறம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக்கின்றது. அக்குதிரையின் முகத்திற்குக் கீழாக இரண்டு தொட்டிகள் உள்ளன. அத்தொட்டிகளில் இரண்டு ஆமைகள் உள்ளன. குதிரை முகத்தின் அருகிலிருந்து பெருவழுதி என்ற சொல் தொடங்குகிறது. அச்சொல் தொன்மையான தமிழ்-பிராமி எழுத்து வடிவத்தில் இருமுறை பொறிக்கப்பட்டு உள்ளது.



 — பெ

 — ரு

 — வ -(பட்டிபேருலு எழுத்து முறையில் இந்த எழுத்து எழுதப்பட்டுள்ளதால் 'வ' என்றே படிக்க வேண்டும். 'வா' என்று படிக்கக் கூடாது.)

 — ழு

 — தி

குதிரையின் முன்னங்கால்களின் கீழ் ஒரு சின்னத்தைக் காண்கிறோம். தொன்மையான வெள்ளி முத்திரை நாணயங்களில் காணப்படும் அச்சின்னம் மூன்று கையுடைய ஒரு சின்னமாகும். இதனை ஆங்கிலத்தில் triskle என்று அழைப்பார்கள்.



Triskle

Veerasigamani hoard (Madras Museum) 1.

பின்புறம்: இரண்டு மீன் சின்னங்கள்.

1. Gupta P.L. and Hardaker T.R. Silver punch marked coin of Magadha - Maurya Karshapana series.

நாணயம்: 2

புகைப்படம்



வரைபடம்



செப்பு நாணயம். ஆறு பக்கங்கள் கொண்டது. நான்கு பக்கங்கள் 1 செ.மீ. நீளமும் மற்றவை முறையே 1.3 செ.மீ. நீளமும், 0.8 செ.மீ. நீளமும் கொண்டவை. எடை: 2.900 கிராம்

முன்புறம்: இந்த நாணயத்தின் முன்புறம் இடப்பக்கம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக்கிறது. குதிரை முகத்தின் கீழே ஒரு தொட்டியுள்ளது. தொட்டியில் ஆமை ஒன்று காணப்படுகிறது.

குதிரை முகத்தின் அருகிலிருந்து பெருவழுதி என்ற சொல் தொடங்குகிறது. அச்சொல் தமிழ் -பிராமி எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.




[எழுத்து வடிவத்தின் அடிப்பாகம் மட்டும் தெரிகிறது.




(இவ்வடிவம் சிற்றண்ணவாயில் குகைத் தளக் கல்வெட்டில் காணப்படுகிறது. அக்கல்வெட்டின் காலம் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 1 ஆம் நூற்றாண்டுக்குள் அமையும் என்று திரு.ஐராவதம் மகாதேவன் கருதுகிறார்.[1]

பின்புறம்: இரண்டு மீன்கள் உள்ளன.

நாணயம்: 3

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

1 Iravatham Mahadevan -Corpus of the Tamil -Brahmi Inscriptions -page 70. Seminar on Inscriptions -1966.

இடப்புறம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக்கிறது. குதிரையின் முகத்தின் கீழ் ஒரு நீண்ட சதுரத் தொட்டி. அதில் ஓர் ஆமை.

குதிரை முகத்தின் மேலிருந்து பெருவழுதி என்ற சொல் தொடங்குகிறது. அச்சொல் தமிழ் -பிராமி எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டு உள்ளது.

𑀧𑁂𑀭𑀼𑀯𑀵𑀼𑀢𑀺

𑀧𑁂 _ பெ

𑀭𑀼 _ ரு

𑀯 _ வ ___ (பட்டிபெருலு முறையில் எழுதப்பட்டுள்ளது.)

𑀵𑀼 _ ழு

𑀢𑀺 _ தி ___ இதன் வடிவம் முழுமையாகத் தெர்யவில்லை.

பின்புறம்: இரண்டு மீன் சின்னங்கள்.

நாணயம்: 4

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

செப்புநாணயம். நீளம்: 1.3 செ.மீ. அகலம்: 1.3 செ.மீ. எடை: 3.250 கிராம்.

முன்புறம்: இந்த நாணயத்தின் முன்புறம் இடப்புறம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக்கின்றது. குதிரைத் தலையின் எதிரே இறக்கையை விரித்த பருந்தொன்றும், அதன் கீழ் அடையாளம் தெரியாத சின்னமொன்றும், குதிரைத் தலையின் கீழாக நாணயத்தின் இடப்புற விளிம்பிற்கு அருகில் பீடத்தின் மேல் யூபத் தூண் ஒன்று காணப்படுகிறது. குதிரைத் தலையின் அடியில் ஓர் ஆமையுள்ள தொட்டி ஒன்றும் காணப்படுகிறது.

இச்சின்னங்களில் குறிப்பாக, இறக்கை விரித்த பருந்தும், யூபத் தூணும், அசுவமேத வேள்வியைக் குறிக்கும் சின்னங்கள். வேள்விகள் செய்து பெயரும் புகழும் பெற்றவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பதைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

நாணயத்தின் தலைப் பகுதியில் ரு, வ எழுத்துக்களைத் தவிர பிற எழுத்துக்களின் வடிவம் தெளிவாக இல்லை.



இந்த நாணயத்திலும் இரண்டு முறை பெருவழுதி என்ற சொல் எழுதப்பட்டு இருக்க வேண்டும். பல எழுத்துக்கள் நாணயத்தில் அச்சாகவில்லை. இந்நாணயத்திலும் 'வ' என்ற எழுத்து பட்டிபேருலு முறையில் எழுதப்பட்டு உள்ளது.

பின்புறம்: மீன் சின்னம்.

நாணயம்: 5 (1)

செப்பு நாணயம் நீளம் 1.7 செ.மீ. அகலம் 1.7 செ.மீ. எடை தெரிய வில்லை.

**புகைப்படம்**





**வரைபடம்**





முன்புறம்: இந்த நாணயத்தின் முன்புறம் இடப்புறம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக்கின்றது. குதிரையின் முகத்தின் எதிரே ஒரு நீண்ட சதுரத் தொட்டி உள்ளது. தொட்டியில் இரண்டு ஆமைகள் உள் ளன. குதிரையின் மேல் மூன்று 'டவுரின்' சின்னங்கள் உள்ளன. குதிரை முகத்தின் அருகிலிருந்து பெருவழுதி என்ற சொல் தொடங்கு கிறது. அச்சொல் தொன்மையான தமிழ் -பிராமி எழுத்து வடிவத்தில் இருமுறை பொறிக்கப்பட்டு உள்ளது. குதிரையின் வயிற்றின் கீழ் ஒரு தெளிவற்ற சின்னம் உள்ளது.

பின்புறம்: மீன் சின்னம்.

### இந்நாணயங்களின் காலம்:

நாணய எண்.1, எண்.2, எண்.3 இவற்றில் காணப்படும் ழு-கர எழுத்து, மதுரை மாவட்ட மாங்குளம் குகைத் தளத்தில் வெட்டப்பட்டுள்ள தமிழ் -பிராமி எழுத்து வகையை ஒத்துள்ளது. ழு-கரத்தின் மேல் வட்டம், கல்வெட்டில் இடைவெளியில்லாமல் ஒன்று சேர்ந்திருப்பது போல் இந்நாணயங்களிலும் ஒன்று சேர்ந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இக்கல்வெட்டைப் படித்த தொல்லெழுத்தறிஞர் திரு.ஐராவதம் மகாதேவன் அவர்கள் இக்கல்வெட்டு கி.மு.2 அல்லது முதல் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறியுள்ளார். 1

ஆயினும் நாணய எண்.1, 3, 4 ஆகியவற்றில் பட்டிபேருலு வகை 'வ' வடிவம் பொறிக்கப்பட்டு உள்ளதால், கி.மு.2 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவை இவை என்று கொள்வதில் தவறு நேர்ந்து விடாது.

மேலும் இங்குக் கூறப்பட்டுள்ள நாணயங்களில் காணப்படும் சில எழுத்துக்கள் இலங்கையில் காணப்படும் சில குகைத் தளக் கல்வெட்டு எழுத்துக்களை ஒத்திருக்கின்றன. அவற்றின் காலம் கி.மு.3 முதல் கி.மு.2 வரையிலான காலமாகக் கணக்கிடப்பட்டு உள்ளது. 2

இந்த அடிப்படையில் எண்ணிப் பார்த்தால் கருத்து வேறுபாட்டிற்குரிய இந்த நாணயங்களின் காலத்தை கி.மு.3 ஆம் நூற்றாண்டாகக் கருதலாம் என்று கூறத் தோன்றுகிறது.

### தொல்லெழுத்து அறிஞர்களின் கருத்து

நாணய எண் ஒன்றின் காலம் குறித்து புகழ்பெற்ற தமிழ் -பிராமி எழுத்தறிஞரான திரு.ஐராவதம் மகாதேவன் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

"அந்நாணயத்தில் காணப்படும் சொற்றொடரில் பெருவழுதி -பெருவழுதிஸ என்ற இரு பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மூன்று கையுடைய சின்னத்தை பிராமி எழுத்தான 'ஸ' என்று தான் கொள்ள வேண்டும்.

தமிழ் மொழியில் 'பெருவழுதி' என்று எழுதப்பட்டு உள்ளது. அதற்கடுத்தாற்போல் பிராகிருத மொழியில் 'பெருவழுதிஸ' என்று பொறிக்கப்பட்டு உள்ளது. அந்நாணயத்தின் காலம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். 3

---

1 Iravatham Mahadevan —Corpus of the Tamil -Brahmi Inscriptions —page 69. Seminar on Inscriptions -1966.

2 Paleographical Development of the Brahmi Script in Ceylon from 3rd C.B.C to 7th C. A.D by C.W.Nilcholas. University of Ceylon Review Vol.VIII -2.

3 Indian Express —Madras Edition —dt.9.2.85. Another rare coin.

மத்திய அரசின் முதன்மைத் தொல்லெழுத்து அலுவலராக இருந்து ஓய்வு பெற்ற தொல்லெழுத்தறிஞர் திரு.கே.ஜி. கிருஷ்ணன் இந்த நாணயம் குறித்து மாறுபட்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

"அந்த நாணயம் இரு மொழி நாணயமன்று. பிராகிருத வழக்குப் படி முதல் சொற்றொடர் 'பெருவழுதிஸ' என்றால் அடுத்த சொற்றொடர் தமிழ் வழக்குப்படி 'பெருவழுதிக்கு' என்று இருக்க வேண்டும். ஆனால் பெருவழுதி என்ற சொல்லுக்குப் பின் எதுவுமில்லை என்பதை கவனிக்கவும். 1

திரு.கே.ஜி.கிருஷ்ணன் மேலும் கூறுகையில், "ஒரே பெயரை இரண்டு முறை ஏன் பொறிக்க வேண்டுமென்பது ஆய்விற்குரியது. பெருவழுதி என்ற பெயர் முதலில் 'பட்டிபேருலு' எழுத்து வகையைப் பயன்படுத்திப் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது 'பெருவழுதி' என்ற சொற்றொடர் தமிழ்முறையைப் பயன்படுத்தி பொறிக்கப்பட்டு உள்ளது.

விவாதத்திற்குரிய இந்த நாணயம் தமிழகத்தின் வட பகுதியில் புழக்கத்திற்காக வெளியிடப்பட்டு இருக்கலாம். ஆனால் உறுதியாக எதுவும் சொல்ல முடியாது. ஒரு வேளை 'பட்டிபேருலு' எழுத்து முறை வழக்கிலிருந்த பகுதிகளிலும் பெருவழுதியின் ஆட்சி இருந்திருக்கலாம்.

அசோகரின் எழுத்து முறை தக்காணத்தில் பரவுதற்கு முன்பே இந்த நாணயம் வெளியிடப்பட்டு இருக்கலாம்.

தெலுங்கும், கன்னடமும் அசோகரின் எழுத்து முறையைப் பிற்காலத்தில் ஏற்றுக் கொண்டுள்ளன. 2

---

1 சாதவாகனரது இருமொழி வெள்ளி நாணயங்களில் ஒருபுறம் பிராகிருதச் சொற்றொடரும், மறுபுறம் பிராகிருதச் சொற்றொடரின் சரியான தமிழ் மொழிபெயர்ப்புத் தொடரும் உள்ளன. அந்த அடிப்படையில் பெருவழுதி நாணயம் இருக்க வேண்டுமென்பது திரு.ஐராவதம் மகாதேவனின் கருத்து. ஆனால் அந்நாணயச் சொற்றொடர் போல இந்நாணயத்தில் இல்லை என்பது கே.ஜி.கிருஷ்ணனின் உள்ளக் கிடக்கை. — நூலாசிரியர்.

2 Krishnan K.G. Chief Epigraphist (Rtd) Govt. of India, Mysore in his personal letter to the author dated 5.4.86

# 5. தொட்டி ஆமை, குதிரை நாணயங்கள்

பெருவழுதி என்ற பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்களின் முன்புறத்தில் குதிரையும், அதன் முகத்திற்கெதிரே ஒரு தொட்டியும், அத்தொட்டியில் ஆமைச் சின்னமும் உள்ளதைக் கண்டோம்.

பெருவழுதிப் பெயர் இல்லாமல் குதிரையும், அதன் முகத்திற்கெதிரே ஒரு தொட்டியும், அத்தொட்டியில் ஆமைச் சின்னங்களும், குதிரையைச் சுற்றி 'டவுரின்' சின்னங்களும் உள்ள, நாணயங்களும் உள்ளன. அவை குறித்து இனி காண்போம்.

நாணயம்: 1

செப்பு நாணயம். நீளம்: 1.5 செ.மீ. அகலம்: 1.5 செ.மீ. எடை: 4.600 கிராம்.

| முன்புறம் | புகைப்படம் | பின்புறம் |
|---|---|---|
|  | |  |
| | வரைபடம் | |
|  | |  |

முன்புறம்:

இடப்பக்கம் நோக்கி நிற்கும் ஒரு குதிரை. முகத்திற்கெதிரே ஒரு தொட்டி. தொட்டியில் ஒன்றையொன்று எதிர் நோக்கியுள்ள ஆமைகளும், குதிரையின் மேல் 'டவுரின்' சின்னங்களும், அதே போன்ற ஒரு சின்னம் குதிரையின் வயிற்றின் அடியிலும் உள்ளன.

நாணயம்: 2

செப்பு நாணயம். நீளம்: *1.3* செ.மீ. அகலம்: *1.3* செ.மீ. எடை: *3.400* கிராம்.

புகைப்படம்





வரைபடம்






முன்புறம்: இடப்பக்கம் நோக்கி நிற்கும் ஒரு குதிரை. குதிரைத் தலையின் கீழ் ஒரு தொட்டியும், அதில் தெளிவற்ற ஆமைச் சின்னம் ஒன்றையும் காண்கிறோம். குதிரையின் மேல் 'டவுரின்' சின்னங்களும், மீன் சின்னங்களும் கலந்து காணப்படுகின்றன. குதிரையின் வயிற்றின் கீழ் மற்றொரு 'டவுரின்' சின்னம் காணப்படுகிறது.

பின்புறம்: மீன் சின்னம்

நாணயம்: 3

*செப்பு நாணயம். நீளம்: 1.5 செ.மீ. அகலம்: 1.5 செ.மீ. எடை: 3.900 கிராம்.*

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

முன்புறம்:

இடப்பக்கம் நோக்கி நிற்கும் ஒரு குதிரை. குதிரைத் தலையின் கீழ் ஒரு தொட்டி. அதில் இரண்டு ஆமைகள் உள்ளன. குதிரையின் மேல் பல தெளிவற்ற சின்னங்கள்.

பின்புறம்: மீன் சின்னம்.

# 6. தொட்டி ஆமை நாணயங்கள்

பெருவழுதி என்ற பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்களின் முன்புறத்தில் குதிரையும், அதன் முகத்திற்கெதிரே ஒரு தொட்டியும், அத்தொட்டியில் ஆமைச் சின்னமும் உள்ளதைக் கண்டோம்.

அச்சின்னத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் நாணயங்கள் பெருவழுதி மன்னர் பரம்பரையில் வந்த மன்னன் ஒருவனாலோ, பலராலோ வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கருதுவது தவறாகாது.

நாணயம் 1:

*செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ. அகலம் 1.7 செ.மீ. எடை: 7.100 கிராம்.*

| முன்புறம் | புகைப்படம் | பின்புறம் |
|---|---|---|
|  | |  |
| | வரைபடம் | |
|  | |  |

முன்புறம்:
நாணயத்தின் கீழ்ப்பகுதியில் ஒரு தொட்டியும், அதனுள் ஒன்றையொன்று எதிர் நோக்கியுள்ள நான்கு ஆமைகளும் உள்ளன. நான்கு ஆமைகளில் மூன்றின் உருவங்கள் தெளிவாக உள்ளன. தொட்டியின் மேல் யானை உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. நாணயத்தின் இடப்பக்கம் வேலியிட்ட மரம் தலைகீழாய் உள்ளது.

பின்புறம்: மீன் சின்னம்.

**நாணயம் 2:**

செப்பு நாணயம். நீளம் *1.7* செ.மீ. அகலம் *1.7* செ.மீ. எடை: **5.500** கிராம்.

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| **வரைபடம்** | |
|  |  |

முன்புறம்:
நாணயத்தின் கீழ்ப்பகுதியில் ஒரு தொட்டியும், அதில் ஒன்றையொன்று எதிர் நோக்கியுள்ள நான்கு ஆமைகளில் மூன்றை மட்டுமே காண முடிகின்றது.

தொட்டியின் மேல் ஒரு யானை வலப்பக்கம் நோக்கி நிற்கிறது. நாணயத்தின் இடப்பக்கத் தலைப்பகுதியில் வேலியிட்ட மரத்தின் தொட்டி மட்டும் தெரிகிறது. தொட்டியின் கிழே ஆறு புள்ளிகள் உள்ளன.

வேறு சிறு புள்ளிகள் தெரிந்தாலும் அவை குறிப்பிட்டுக் கூறும்படி அமையவில்லை.

பின்புறம்: மீன் சின்னம்

## நாணயம் 3:

செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ. அகலம் 1.7 செ.மீ. எடை: 6.500 கிராம்.

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

முன்புறம்:

நாணயத்தின் கீழ்ப்பகுதியில் இடப்பக்கத்தில் உள்ள தொட்டியில் நான்கு ஆமைகள் உள்ளன. தொட்டியின் மேல் வளைந்த கொம்புடைய யானை நிற்கிறது. வலப்பக்கத்தில் வேலியிட்ட மரம் உள்ளது.

பின்புறம்: மீன் சின்னம்.

## நாணயம் 4:

செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ. அகலம் 1.7 செ.மீ. எடை: 5.200 கிராம்.

புகைப்படம்





வரைபடம்





முன்புறம்:

நாணயத்தின் கீழ்ப்பகுதியில் ஒரு தொட்டியும், அதில் ஒன்றையொன்று எதிர் நோக்கிய நான்கு ஆமைகளும் தெரிகின்றன. தொட்டியின் மேல் யானை உள்ளது. யானையின் இடப்பக்கம் ஆறு புள்ளிகளும், அப்புள்ளிகளின் மேல் பகுதியில் தெளிவில்லாமல் சில கோடுகளும் உள்ளன. யானையின் மேல் 'தவுரின்' சின்னம் உள்ளது. நாணயத்தின் வலப்பக்கம் வேலியிட்ட மரம் தெரிகின்றது.

பின்புறம்: மீன் சின்னம்.

## நாணயம் 5:

செப்பு நாணயம். நீளம் *1.4* செ.மீ. அகலம் *1.2* செ.மீ. எடை: *4.300* கிராம்.

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

முன்புறம்:
நாணயத்தின் இடப்பக்கத்தில் ஒரு தொட்டியும் அதில் இரண்டு ஆமைகளும், அதன் மேலே ஒரு யானையும் உள்ளன. நாணயத்தின் வலப்பக்கத்தில் வேலியிட்ட மரமும் அதன் மேலே 'தவுரின்' இலச்சினையும் காணப்படுகின்றன.

பின்புறம்: மீன் சின்னம்.

நாணயம் -6

செப்பு நாணயம். நீளம் *1.5* செ.மீ. அகலம் *1.3* செ.மீ. எடை: *3.800* கிராம்.

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

முன்புறம்:

நாணயத்தின் இடப்பக்க அடிப்பகுதியில் மூன்று வளைவுள்ள முகடும், அதற்கு மேல் 'தவுரின்' சின்னமும், அச்சின்னத்தின் மேல் மீன் சின்னமும், அதற்கு மேல் 'தவுரின்' சின்னத்தின் ஒரு பகுதியும் உள்ளன. நாணயத்தின் வலப்பக்க அடிப்பகுதியில் ஒரு தொட்டியும் அதற்கு மேல் யானையும் உள்ளன. தொட்டியில் இரண்டு ஆமைகள் உள்ளன.

பின்புறம்: மீன் சின்னம்.

## நாணயம் 7:

செப்பு நாணயம். நீளம் *1.5* செ.மீ. அகலம் *1* செ.மீ. எடை: *2.800* கிராம்.

| புகைப்படம் | |
| --- | --- |
|  |  |
| வரைபடம் | |
|  |  |

முன்புறம்: நாணயத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள ஒரு தொட்டியில் இரண்டு ஆமைகள் உள்ளன. தொட்டியின் மேல் வலப்பக்கம் நோக்கும் ஒரு யானை உள்ளது. இடப்பக்க மேற்பகுதியில் ஒரு 'சுவஸ்திக்' சின்னம் உள்ளது.

பின்புறம்: மீன் சின்னம்.

நாணயம் 8:

செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ. அகலம் 1.8 செ.மீ. எடை: 6.200 கிராம்.

புகைப்படம்





வரைபடம்





முன்புறம்:

தொட்டியின் மேல் யானை. தொட்டியில் இரண்டு ஆமைகள் மட்டும் தெரிகின்றன. மீதியுள்ள இரண்டு ஆமைகள் நாணயத்தில் அச்சாகவில்லை. யானையின் முன்பு வேலியிட்ட மரம். யானையின் மேல் 'தவுரின்' இலச்சினைகள் உள்ளன. அதன் மேல் வலக் கோடியில் மூன்று வளைவுகள் உள்ள முகட்டின் ஒரு பகுதியை மட்டும் காண்கிறோம்.

பின்புறம்: மீன் சின்னம்.

## நாணயம் 9:

செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ. அகலம் 2 செ.மீ. எடை: 8.200 கிராம்.

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| **வரைபடம்** | |
|  |  |

முன்புறம்:

நாணயத்தின் இடப்புற மையத்தில் உள்ள தொட்டியில் நான்கு ஆமைகள் உள்ளன. தொட்டியின் கீழ் ஒரு கொம்பன் யானை வலப்பக்கம் நோக்கி நிற்க, அதன் எதிரில் வேலியிட்ட மரம் உள்ளது. நாணயத்தின் தலைப்பகுதி வலக்கோடியில் மூன்று வளைவுள்ள முகடு ஒன்று காணப்படுகிறது.

பின்புறம்: மீன் சின்னம்.

நாணயம் 10:

செப்பு நாணயம். நீளம் *1.6* செ.மீ. அகலம் *1.6* செ.மீ. எடை: *7.800* கிராம்.

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

முன்புறம்:

நாணயத்தின் முன்புறத்தில் வலப்பக்கம் நோக்கி நிற்கும் ஒரு யானையும், யானைக்கு மேலாக இடப்பக்கத் தொட்டியில் ஓர் ஆமையும், நாணயத்தின் வலப்பக்க மேற்பகுதியில் வேலியிட்ட மரத்தையும், வலப்பக்கக் கீழ்ப்பகுதியில் மூன்று வளைவு முகட்டின் ஒரு பகுதியையும் நாம் காண்கிறோம்.

பின்புறம்: மீன் சின்னம்.

நாணயம் 11 [1]

செப்பு நாணயம். நீளம், அகலம், எடை தெரியவில்லை. டெல்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகக் கண்காட்சியில் இருந்ததைப் பார்த்து வரையப்பட்டது.

முன்புறம்:

நாணயத்தின் கீழ்ப்பகுதி மத்தியில் மீன் சின்னம் உள்ளது. அதன் மேல் யானைச் சின்னம். யானையைச் சுற்றி, 'டவுரின்' சின்னங்கள் வலம் வருவது போல் உள்ளன. இடப்பக்கம் மேல் பகுதியில், ஒரு தொட்டியும், அதில் நான்கு ஆமைகளும் ஒன்றையொன்று எதிர் நோக்கி உள்ளன.

வலப்பக்கத்தில் ஆறு .முகடுள்ள மலைச் சின்னமும். வலப்பக்க மேல் மூலையில் வேலியிட்ட மரச் சின்ன்மும் காணப்படுகின்றன..

பின்புறம்: மீன் சின்னம்.

இந்த நாணயத்தில் தொட்டி ஆமைச் சின்னத்தை முதலில் அச்சடித்த பின், யானைச் சின்னம் அதன் மேல் அச்சிடப்பட்டு உள்ளது. இதனால் இந்த நாணயத்தின் முன்புறத்தை உருவாக்க இரண்டு அச்சுக்களைப் பயன்படுத்தினர் என்பது தெளிவு.

| முன்புறம் | பின்புறம் |
| --- | --- |
|  |  |

1. Eye Copy from the display shelf of the National Museum —New Delhi.

நாணயம் 12 [2]

செப்பு நாணயம். நீளம், அகலம், எடை தெரியவில்லை. டெல்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகக் கண்காட்சியில் இருந்ததைப் பார்த்து வரையப்பட்டது.

முன்புறம்:

நாணயத்தின் கீழ்ப்பகுதி இடப்பக்கத்தில் ஆறு வளைவு முகட்டுச் சின்னம். நடுவில் தொட்டியும், அதில் நான்கு ஆமைகளும் உள்ளன. தொட்டியின் மேல் ஆறு புள்ளிகளும், அதன் அருகில் தெளிவில்லாத ஒரு சின்னமும் உள்ளன. கீழ்ப்பகுதி வலப்பக்கத்தில் யானைச் சின்னம் காணப்படுகிறது.

பின்புறம்: மீன் சின்னம்.

| முன்புறம் | பின்புறம் |
|---|---|
|  |  |

நாணயம் 13 [3]

செப்பு நாணயம். நீளம், அகலம், எடை தெரியவில்லை. டெல்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகக் கண்காட்சியில் இருந்ததைப் பார்த்து வரையப்பட்டது.

முன்புறம்:

நாணயத்தின் கீழ்ப்பகுதி மத்தியில் மீன் சின்னம். மீன் சின்னத்தைச் சுற்றி 'டவுரின்' சின்னங்கள். வலப்பகுதி மேல்பக்கத்தில் யானைச் சின்னம். இடப்பகுதி மேல்பக்கத் தொட்டியில் மூன்று ஆமைச் சின்னங்கள் தெரிகின்றன.

பின்புறம்: மீன் சின்னம்.

---

2. 3. Eye Copy from the display shelf of the National Museum–New Delhi.

| முன்புறம் | பின்புறம் |
| --- | --- |
|  |  |

நாணயம் 14 [4]

செப்பு நாணயம். நீளம், அகலம் தெரியவில்லை. டெல்லியில் உள்ள அருங்காட்சியகக் கண்காட்சியில் இருந்ததைப் பார்த்து வரையப்பட்டது.

முன்புறம்:

நாணயத்தின் மத்தியில் வலப்பக்கம் நோக்கி நிற்கும் ஒரு யானை. அதன் முன்புறம் ஒன்றும் பின்புறம் ஒன்றுமாக இரண்டு வேலியிட்ட மரங்கள். யானையின் மேல் தொட்டியும், அதில் நான்கு ஆமைகள் ஒன்றையொன்று எதிர் நோக்கி உள்ளன.

பின்புறம்: மீன் சின்னம்.

| முன்புறம் | பின்புறம் |
| --- | --- |
|  |  |

4. Eye Copy from the display shelf of the National Museum —New Delhi.

**நாணயம் 15:**

செப்பு நாணயம். நீளம் *1.6* செ.மீ. அகலம் *1.8* செ.மீ. எடை: *8.500* கிராம்.

<table>
<tr><th colspan="2">புகைப்படம்</th></tr>
<tr><td></td><td></td></tr>
<tr><th colspan="2">வரைபடம்</th></tr>
<tr><td></td><td></td></tr>
</table>

முன்புறம்: நாணயத்தின் மையமாக ஒரு யானை உள்ளது. யானையின் கொம்புகள் வளைந்து மிகப் பெரிதாக உள்ளன. நாணயத்தின் இடப்புற மேற்பகுதியில் ஒரு தொட்டியும் அதில் ஓர் ஆமையும் உள்ளன. யானைக்கு மேலாக மீன் போன்ற சின்னம் ஒன்று காணப்படுகிறது. நாணயத்தின் வலப்பக்கக் கீழ்ப்பகுதியில் மூன்று வளைவுள்ள முகட்டின் ஒரு பகுதி மட்டும் தெரிகிறது.

பின்புறம்: மீன் சின்னம்.

**நாணயம் 16:**

*செப்பு நாணயம். நீளம் 1 செ.மீ. அகலம் 1 செ.மீ. எடை: 2 கிராம்.*

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

**முன்புறம்:**

நாணயத்தின் இடப்பக்கக் கீழ்ப்பகுதியில் மூன்று வளைவுள்ள முகடும், அதன் வலப்பக்கத்தில் ஒரு தொட்டியும் அதில் ஓர் ஆமையும் உள்ளன. நாணயத்தின் மையப்பகுதியில் ஒரு சதுர பீடத்தில் சிவ லிங்கம் ஒன்று உள்ளது. சிவலிங்கத்தைச் சுற்றி 'டவுரின்' சின்னங்களும் காணப்படுகின்றன. நாணயத்தின் மேற்பகுதியில் வலமிருந்து இடமாக வேலியிட்ட மரம் உள்ளது.

**பின்புறம்: மீன் சின்னம்.**

## நாணயம் 17:

செப்பு நாணயம். நீளம் 1 செ.மீ. அகலம் 1 செ.மீ. எடை: 1.600 கிராம்.

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

முன்புறம்:

இடப்புறம் வேலியிட்ட மரம், வலப்புறத் தொட்டியில் ஓர் ஆமை. மேற்பகுதியில் கோட்டு வடிவில் மீன் சின்னம். அதன் கீழ் மற்றொரு மீன் சின்னம். வலப்புறத் தொட்டியின் மேல் உள்ள சதுரத்தொட்டியின் நடுவில் சிவலிங்கம்.

பின்புறம்: மீன் சின்னம்.

**நாணயம் 18:**

செப்பு நாணயம். நீளம் 0.75 செ.மீ. அகலம் 0.60 செ.மீ. எடை: 0.750 கிராம்.

புகைப்படம்





வரைபடம்





முன்புறம்: நாணயத்தின் வலப்பக்கம் பெரிய தொட்டியும், அதில் ஒரு பெரிய ஆமையும் உள்ளன.

கீழ்ப்பகுதியின் இடக்கோடியில் மூன்று வளைவுள்ள முகட்டின் ஒரு பகுதியை மட்டும் காண்கிறோம். அதன் மேல் 'மீன் இலச்சினைகள் உள்ளன.

பின்புறம்: மீன் சின்னம்.

நாணயம் 19:

செப்பு நாணயம். நீளம் *1* செ.மீ. அகலம் *0.75* செ.மீ. எடை: *0.500* கிராம்.

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

முன்புறம்:
தொட்டியில் ஓர் ஆமை. வேறு சின்னங்கள் ஏதும் இல்லை.

பின்புறம்: மீன் சின்னம்.

நாணயம் 20:

செப்பு நாணயம். நீளம் *2.2* செ.மீ. அகலம் *2* செ.மீ. எடை: *10.200* கிராம்.

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

முன்புறம்: நாணயத்தின் மையத்தில் உள்ள வட்டத் தொட்டியில் ஓர் ஆமை உள்ளது. இடப்பக்க மேற்பகுதியில் சங்கும், வலப்பக்க மேற்பகுதியில் ஆறு வளைவுள்ள முகடும், இடப்பக்க அடிப்பகுதியில் யானைச் சின்னமும், வலப்பக்க அடிப்பகுதியில் நீண்டு வளைந்த கொம்புடைய எருதும் காணப்படுகின்றன.

பின்புறம்: மீன் சின்னம்.

# 7. தொட்டி ஆமை நாணயங்களின் காலம்

இரண்டு மீன்கள் உள்ள தொட்டி அமைப்புச் செப்பு நாணயங்கள் இராஜஸ்தான் மாநிலத்தில் வாழ்ந்த உதேஹீகா பழங்குடி மன்னர்களால் வெளியிடப்பட்டன. இவை சதுர வடிவச் செப்பு நாணயங்கள். நாணயத்தின் முன்புறத்தில் நான்கு வட்டங்கள் இணைந்துள்ள உஜ்ஜேன் இலச்சினை, இரண்டு மீன்களுள்ள தொட்டி, வேலியிட்ட மரம் ஆகியவற்றையும், அவற்றின் கீழே பிராமி எழுத்தில் எழுதப்பெற்ற உதேஹாகி சொற்றொடரையும் காண முடிகிறது. (1)

பின்புறத்தில் வேலியிட்ட மரம் படுக்கை நிலையிலும், அதன் கீழ் வலப்பக்கம் நோக்கும் ஒரு காளையும் காணப்படுகின்றன.



உதேஹாகி நாணயங்களின் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டு அல்லது கி.மு. 2ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. (2)

பெருவழுதி நாணயங்களில் இரண்டு மீன்களுள்ள தொட்டிக்குப் பதிலாக இரண்டு ஆமைகள் கொண்ட தொட்டிகள் காணப்படுவதால் அவற்றை உதேஹாகி நாணயங்களின் காலத்தவை அல்லது அதற்குச் சற்றுப் பிற்காலத்தவை என்று கருத இடமுண்டு.

'உதேஹாகி' நாணயங்களில் காணப்படும் வேலியிட்ட மரச் சின்னத்தைப் பல பெருவழுதி நாணயங்களிலும் காண முடிகிறது.

## தொட்டியில் நான்கு ஆமைகள்:

தொட்டியில் நான்கு ஆமைகளுக்குப் பதிலாக நான்கு மீன்கள் உள்ள வெள்ளி முத்திரை நாணயங்களும் கிடைத்துள்ளன. இவ்வகை

1. K.K.Das Gupta -A Tribal History of Ancient India. The Uddehikas -page: 174.
2. K.K.Das Gupta -A Tribal History of Ancient India. The Uddehikas -page: 178.

நாணயங்கள் அமராவதியில் கண்டெடுக்கப்பட்ட வெள்ளி முத்திரை நாணயப் புதையலில் அதிகமாக உள்ளன. டாக்டர் குப்தாவின் அட்டவணைப்படி இவற்றை IV வரிசையிலும், VI வரிசையிலும் காண்கிறோம்.

தொட்டியில் நான்கு மீன்கள் கொண்ட வெள்ளி முத்திரை நாணயங்கள் திருநெல்வேலி மாவட்ட வீரசிகாமணியில் கிடைத்த நாணயப் புதையலில் கண்டெடுக்கப்பட்டதாக டாக்டர் பி.எல்.குப்தா கூறுகிறார்.(1)

அவை VI ஆம் வரிசையைச் சார்ந்ததாகவும் கூறுகிறார்.

டாக்டர் குப்தாவின் ஆய்வுப்படி வரிசை IV வகை நாணயங்கள் கி.மு.410 முதல் கி.மு.320 வரை உள்ள காலத்தைச் சேர்ந்தவை. வரிசை VI வகை நாணயங்கள் கி.மு.320 முதல் கி.மு.150 வரை உள்ள காலத்தைச் சார்ந்தவை என்றும் கணக்கிட்டிருக்கிறார்.(2)

பெருவழுதி என்ற பெயருள்ள செப்பு வார்ப்பட நாணயங்களில் நான்கு மீன்களுக்குப் பதிலாக, நான்கு ஆமைகள் உள்ளன. எனவே இவை வெள்ளி முத்திரை நாணயங்களுக்குச் சற்று பிற்பட்ட காலத்தை சார்ந்தவையெனக் கொண்டு கி.மு.3 ஆம் நூற்றாண்டு அல்லது கி.மு.2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக இருக்கலாம் என்று கருதுவது தவறாகாது.



மூன்று வளைவு முகடு | ஆறு வளைவு முகடு

மூன்று வளைவு முகடும், ஆறு வளைவு முகடும் பொறிக்கப்பெற்ற பெருவழுதி நாணயங்களும் உள்ளன.

மூன்று வளைவு முகடும், ஆறு வளைவு முகடும் தொன்மையான சின்னங்கள்.

உத்திரப்பிரதேச மாநிலத்தில், அலகாபாத் நகருக்கருகில் கோசாம்பி என்ற நகர் உள்ளது. இந்திய நாட்டில் மிகத் தொன்மையான நகரங்களில் கோசாம்பியும் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

(1) Dr.Gupta P.L. Silver punch marked coins of the Magadha - Maurya -Karshapana Series. Page.78.

(2) Dr.Gupta P.L. Silver punch marked coins of the Magadha - Maurya -Karshapana Series. Page.10.

இங்குக் கிடைத்த வெண்கல நாணயங்களில் எருது, வேலியிட்ட மரம் ஆகிய சின்னங்கள் முக்கியமானவை. அவை தவிர மூன்று வளைவு முகடும், ஆறு வளைவு முகடும் இந்நாணயங்களில் காணப்படுகின்றன. இவ்வகைக் கோசாம்பி நாணயங்களின் காலம் கி.மு.2 ஆம் நூற்றாண்டு என்று அல்லன் (1) கருதுகிறார்.

மூன்று வளைவு முகடு, ஆறு வளைவு முகடு நாணயங்களைப் பிற்கால மன்னர்களும் வெளியிட்டுள்ளனர். ஆனால் பாண்டியரின் சதுர வடிவ நாணயங்கள் தொன்மையானவை என்று கருதப்படுவதால் மூன்று வளைவு முகடு, ஆறு வளைவு முகடுள்ள பெருவழுதி நாணயங்களின் காலத்தை கி.மு.2 ஆம் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

## சதுர மேடையில் சிவலிங்கம்:

16, 17 எண்ணுள்ள நாணயங்களில் சதுர மேடையில் சிவலிங்கமும் அதனைச் சுற்றி மீன்கள் மிதப்பது போலவும் பொறிக்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற சின்னத்தைத் தொன்மையான வெள்ளி முத்திரை நாணயங்களில் காணமுடிகின்றது. அமராவதியில் கிடைத்த வெள்ளி முத்திரை நாணயப் புதையலில் இச்சின்னம் இருப்பதாகவும், அவ்வகை நாணயங்கள் ||| ஆம் கால வரிசையைச் சார்ந்தவை என்றும் டாக்டர் குப்தா கருதுகிறார். (2) அவ்வகை நாணயங்கள் கி.மு.430 முதல் கி.மு.410 வரையுள்ள காலத்தைச் சார்ந்தவையென்று டாக்டர் குப்தா கணக்கிட்டுள்ளார். (3)

சதுர மேடையில் சிவலிங்கச் சின்னமுள்ள பெருவழுதி நாணயங்கள் செப்புத் தகட்டைச் சூடாக்கி அதில் அச்சைப் பதிய வைக்கும் முறையில் செய்யப்பட்டவை. அவ்வகை நாணயங்கள் கி.மு.3 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு.2 ஆம் நூற்றாண்டுக்குள் உருவாக்கப்பட்டவை என்று கருதுவதில் தவறில்லை.

---

(1) John Allen -catalogue of the coins in Ancient India. —page xcviii
(2) Gupta -P.L. Silver Punch marked Coins of the Magadha - -Maurya - Karshapana series -Page. 61
(3) Gupta -P.L. Silver Punch marked Coins of the Magadha - -Maurya - Karshpana series -Page -10.

# 8 ஆமை, கோயில் சின்னங்கள் கொண்ட பெருவழுதி நாணயங்கள்

பெருவழுதி நாணயங்களில் கடல் ஆமைச்சின்னம் பொதுவாகக் காணப்படுகிறது. ஒன்று அல்லது இரண்டு ஆமைகள் உள்ள தொட்டி நாணயங்களைப் பற்றி ஏற்கனவே கூறியுள்ளோம்.

சில நாணயங்களில் ஆமையுடன், கோயில் சின்னமும் காணப்படுகிறது.

ஆமைச்சின்னத்தை அடிப்படையாகக் கொண்டு இரண்டு நாணயங்களையும், கோயில் சின்னத்தை அடிப்படையாகக் கொண்டு மூன்று நாணயங்களையும் ஆய்விற்கு எடுத்துக் கொள்வோம்.

இந்த ஐந்து பெருவழுதி நாணயங்களில் காணப்படும் சில சின்னங்களுக்கும் வடநாட்டில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் கொரக்பூர் நகருக்கு அருகில் சோகுர கிராமத்தில் 1890 ஆம் ஆண்டில் கிடைத்த சின்னங்களுக்கும் எழுத்துப் பொறிப்புள்ள வெண்கலத் தகட்டிற்கும் பல ஒற்றுமை நயங்கள் உள்ளன. அத்தகட்டிற்குச் சோகுர வெண்கலத் தகடென்று பெயர்.



சோகுர வெண்கலத்தகடு

சோகுர வெண்கலத்தகடு 2x5/8" X 1x5/8" நீள அகலம் கொண்டது அந்தத் தகட்டின் தலைப்பகுதியில் ஏழு சின்னங்கள் காணப்படுகின் றன. சின்னங்களின் அடிப்பகுதியில் நான்கு வரிகளில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. *(1)*

தகட்டின் தலைப்பகுதியில் இடப்புறம் வேலியிட்ட மரச்சின்னம் காணப்படுகின்றது. அதில் ஒரு கிளையும், மூன்று இலைகளும் உள் ளன. அதற்கடுத்தாற்போல் இரண்டடுக்குள்ள கூரை கொண்ட கோவில். கோவிலின் கூரை கவிழ்த்து வைத்த பிறைச் சந்திரன் போன்று காணப்படுகிறது. முதல் அடுக்குக் கூரையை நான்கு தூண்க ளும், அதற்கு மேலுள்ள கூரையை மூன்று தூண்களும் தாங்கி நிற்கின் றன. அதற்கு மேல் மூன்று தூண்கள் மட்டும் உள்ளன. கோயிற் சின் னத்திற்கு அடுத்து வேல் சின்னம் ஒன்று உள்ளது. அதற்கடுத்து நான் காவதாக உள்ள சின்னம் மூன்று முகடுகளுடைய ஒரு மலையாகும். அம்மலைச் சின்னத்தின் மேல் பிறை ஒன்றும், அப்பிறையின் மேல் ஒரு பந்தும் உள்ளன. அதற்கடுத்தாற்போல், சிறிய அளவில் கதிரவன் சின்னமும், நிலாச்சின்னமும், ஐந்தாவதாக உள்ளன. ஆறாவது சின் னமாக மீண்டும் வேலியிட்ட மரம் வருகிறது. ஆனால் இந்த மரத்தில் இலைகள் இல்லை. ஏழாவது சின்னமாக இரண்டடுக்குக் கோயில் மீண்டும் வந்து நிற்கிறது.

இந்தத் தகட்டின் காலத்தைப் பல அறிஞர்கள் கணித்துக் கூறியுள்ள னர். அறிஞர் வின்சென்ட். ஏ. ஸ்மித்து, இத்தகட்டிலுள்ள எழுத் துக்கள் அசோகனது பிராமி எழுத்தைப் போன்று இருப்பதால் இத் தகடு அசோகன் காலத்தைச் சார்ந்தது என்று கூறியுள்ளார். அவர் கருத்துப்படி கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக அத்தகடு அமையும்.

அறிஞர்கள் ஜெயஸ்வாலும் *(2)*, பருவாவும் *(3)* இத்தகடு அசோகருக்கு முந்திய காலத்தது என்று கருதுகின்றனர். அறிஞர் டி.சி. சர்க்கார், இத்தகடு கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும், எக்காரணம் கொண்டும் அசோகன் காலத்திற்கு முந்தியது என்று கூற முடியாது என்றும் கூறியிருக்கிறார் *(4)*

பெரும்பாலான அறிஞர்கள் இத்தகட்டின் காலத்தை கி.மு. 3ஆம் நூற்றாண்டே என்று கருதுவதால் அதனையே நாம் இத்தகட்டின் காலமாகக் கொள்வதில் ஏதும் தவறில்லை.

---

1. Proceedings of the Asiatic Society of Bengal—May, June 1892.
2. Jayaswal —Epigraphia Indica —Vol. XXII p.p.1
3. Baruva —Annals of the Bhandarkar Oriental Institute XI p.p.32
4. Sircar D.C.—Select Inscriptions —p.82

இலங்கையிலுள்ள கந்தரோடைப் பகுதியில், பி.ஈ. பெய்ரிஸ் என்ற அறிஞர் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சில பாண்டியர் நாணயங்களைக் கண்டெடுத்தார். அவற்றை ஆய்வு செய்து 1919ஆம் இராயல் ஏசியாட்டிக் சொசைட்டி வெளியிட்ட ஆண்டு மலரில் ஒரு கட்டுரையை வெளியிட்டார். (1)

அந்த நாணயங்களில் தொட்டியில் ஆமைச் சின்னங்கள் காணப்படுவதால் அந்த நாணயங்களைப் பெருவழுதி நாணயங்கள் என்று கொண்டு அதன் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.




(1) Pieris P.E.—Nagadipa and Buddhist Remains in Jaffna. Journal No.72. Part I, II, III, IV, Vol. XXVIII, 1919. Royal Asiatic Society, Ceylon Branch.

நாணயம்: I (1)

| முன்புறம் | புகைப்படம் | பின்புறம் |
| --- | --- | --- |
|  | |  |
| | வரைபடம் | |
|  | |  |

முன்புறம்: இந்நாணயத்தில் காணப்படும் ஆறு சின்னங்களில் யானையைத் தவிர மற்றுள்ள ஐந்தும் சோகுரத் தகட்டில் உள்ள சின்னங்களைப் போன்றவை. வேல் சின்னத்திற்குப் பதிலாக ஒரு கொடிக் கம்பம் இங்கே இருக்கிறது.

மேல்வரிசை:

1. இடப்புறம் —வேலியிட்ட மரம் —வேலியில் கடல் ஆமைச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.
2. நடுப்பகுதி —கோயில் சின்னத்தின் அடிப்பகுதி
3. வலக்கோடி —மூன்று முகடுள்ள மலைச்சின்னம்.

கீழ்வரிசை:

1. இடப்புறம் -கொடிமரம்.
2. நடுப்பகுதி -யானை.
3. வலக்கோடி -வேலியிட்ட மரம் -வேலியில் கடல் ஆமைச் சின்னம் காணப்படுகிறது.

பின்புறம்: மீன் சின்னம்.

---

(1) Pieris. P.E.Nagadipa and Buddhist Remains in Jaffna Journal No.72, Part I, II, III, IV Vol.X- XVIII, 1919 Royal Asiatic Society of Ceylon Branch. —Plate XIII, Coin No.9

—Photograph of the Coins kindly given by the Museum of Fine Arts. Boston Branch —U.S.A.

நாணயம் II: (1)

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

முன்புறம்: இந்நாணயத்தில் காணப்படும் சின்னங்களில் யானையைத் தவிர மற்ற நான்கும் சோகுரத் தகட்டில் உள்ளவற்றைப் போன்றவை.

மேல்வரிசை:

1. இடப்புறம்: மூன்று முகடுள்ள மலைச் சின்னம்.
2. நடுப்பகுதி: கவிழ்ந்த பிறை வடிவுடைய கூரைக் கோயில். கூரையை ஐந்து தூண்கள் தாங்கி நிற்கின்றன.
3. வலக்கோடி: வேலியுள்ள மரம், சின்னம் தெளிவாக இல்லை.

கீழ்வரிசை:

1. இடப்பக்கம்: கொடிக் கம்பம்.
2. நடுப்பகுதி: யானைச் சின்னம். இச்சின்னம் சோகுரத் தகட்டில் இல்லை.
3. வலக்கோடி: திரிசூலம். சூலத்தின் தண்டில் ஒரு வெட்டரிவாள் உள்ளது. சூலத்தைத் தாங்கி நிற்கும் பீடத்தில் கூடல் ஆமைச் சின்னம் காணப்படுகிறது. சோகுரத் தகட்டிலோ வேல் உள்ளது. ஆனால் பெருவழுதி நாணயத்தில் திரிசூலம் உள்ளது.

---

1. Pieris P.E. Royal Asiatic Society, Ceylon Branch —Vol. XXVIII, 1919, Plate XIII, COin No.11.

நாணயம் III: (1)

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

முன்புறம்: இந்நாணயத்தில் காணப்படும் ஆறு சின்னங்களில் நான்கு சின்னங்கள் சோகுரத் தகட்டில் உள்ளவற்றைப் போன்றவை.

மேல்வரிசை:

1. *இடப்புறம்:* வேலியிட்ட மரம். மரத்தில் ஓர் இலை மட்டும் உள்ளது. வேலியில் கடல் ஆமைச் சின்னம் தெளிவாகத் தெரியவில்லை.
2. *நடுப்பகுதி:* கவிழ்ந்த பிறை வடிவிலுள்ள கூரைக் கோயில். கூரையை நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன.
3. *வலப்புறம்:* மூன்று வளைவுள்ள முகடு. அதன் மேல் வேலியிட்ட மரம். மரத்தில் மூன்று இலைகள் உள்ளன.

கீழ்வரிசை:

1. *இடப்புறம்:* வலப்புறம் நோக்கி நிற்கும் ஒரு குதிரை.
2. *வலக்கோடி:* இடப்புறம் நோக்கி நிற்கும் ஒரு யானை. சோகுரத் தகட்டிலுள்ள நான்கு சின்னங்கள் இதில் உள்ளன.

(1) Pieris P.E. Royal Asiatic Society, Ceylon Branch —Vol XXVIII, 1919, Plate XIII, Coin No.8.

நாணயம் IV:

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

இந்நாணயம் இங்கிலாந்து அருங்காட்சியகத் தொகுப்பில் உள்ளதாகும். (1)

**மேல்வரிசை:**

1. இடப்புறம்: மூன்று வளைவுள்ள முகடு.
2. நடுப்பகுதி: கவிழ்ந்த பிறை வடிவுள்ள கூரைக் கோயில். கூரையை ஐந்து தூண்கள் தாங்கி நிற்கின்றன.
3. வலப்புறம்: மூன்று முகடுள்ள மலை. அதன் மேல் வேலியிட்ட மரம்.

**கீழ்வரிசை:**

1. இடப்புறம்: கொடி மரம்.
2. நடுப்பகுதி: யானை.
3. வலக்கோடி: வேலியிட்ட மரம். (தெளிவாக இல்லை.)

பின்புறம்: மீன் சின்னம்.

இந்நாணயத்தில் காணப்படும் சின்னங்களில், நான்கு சோகுரத் தகட்டில் காணப்படும் சின்னங்களை ஒத்திருக்கின்றன. சோகுரத் தகட்டில் காணப்படும் வேல் சின்னத்திற்குப் பதில் இங்கே கொடிமரம் உள்ளது.

(1) The British Museum Collection—The Coin No. is OR 1187-8061.

நாணயம் V:

புகைப்படம்





வரைபடம்





இந்நாணயம் இந்நூல் ஆசிரியரிடம் உள்ளது. மேலே குறிப்பிடப் பட்டு உள்ள இங்கிலாந்து அருங்காட்சியக நாணயத்தை ஒத்திருக்கி றது.

மேல்வரிசை:

1. இடப்புறம்: மூன்று வளைவுள்ள முகடு.
2. நடுப்பகுதி: கோயிலின் மையப்பகுதி. ஐந்து தூண்கள் தெரிகின் றன.
3. வலக்கோடி: மூன்று முகடுள்ள மலை. அதன் மேல் வேலியிட்ட மரம் உள்ளது.

கீழ்வரிசை:

1. இடப்புறம்: கொடி மரம்.
2. நடுப்பகுதி: யானை.
3. வலக்கோடி: வேலியிட்ட மரம் (அடி வளைவுள்ள தொட்டியில் மரக்கிளைகள் உள்ளன.)

பின்புறம்: மீன் சின்னம்.

நாணயம் VI[1]

இந்நாணயம் இலண்டன் அறிஞர் திரு.மிக்கேல் மிட்சினரின் தொகுப்பில் உள்ள நாணயம்.

புகைப்படம்





வரைபடம்





முன்புறம்:

மேல்வரிசை:

1. இடப்புறம்: மூன்று வளைவு முகடும் அதன் மேல் ஒரு பிறை வளைவும் உள்ளன.
2. நடுப்பகுதி: கவிழ்ந்த கூரையுடைய கோயில். பல தூண்கள் அக்கூரையைத் தாங்கி நிற்கின்றன.
3. வலக்கோடி: மூன்று வளைவுள்ள முகடு. அதன் மேல் வேலியிட்ட மரச் சின்னத்தின் தொட்டிப் பகுதி மட்டுமே உள்ளது.

கீழ்வரிசை:

1. இடப்புறம்: கொடி மரம்.
2. நடுப்பகுதி: யானை.
3. வலக்கோடி: வேலியிட்ட மரம்.

(திரு. மிக்கெல் மிச்சினர் இச்சின்னத்தை வேலியிட்ட மரமாகக் கொள்ளவில்லை.)

பின்புறம்: மீன் சின்னம்.

---

1. Michael Mitchener —'Ancient and classical World Coins' —page.629.

இந்நாணயத்தில் காணப்படும் ஆறு சின்னங்களில் யானையைத் தவிர மற்றுள்ள ஐந்தும் சோகுரத் தகட்டில் உள்ள சின்னங்களைப் போன்றவை. அதில் உள்ள வேல் சின்னத்திற்குப் பதிலாக இதில் ஒரு கொடிக்கம்பம் உள்ளது. மேலும் மூன்று வளைவு முகடும், அதன் மேல் ஒரு பிறையும் இருப்பது போல் இந்த நாணயத்திலும் அச்சின்னம் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது.

இந்த நாணயத்தில் காணப்படும் பிறைச் சின்னம் கொண்ட மூன்று வளைவு முகடு வரலாற்றுச் சிறப்புடையது: இச்சின்னம் மௌரியரின் சின்னம் என்று வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

சாரநாத்திலுள்ள பௌத்த நினைவுச் சின்னத்தில் மௌரியர் காலத்தைச் சார்ந்த தொல்பொருட்கள் இடையே சில செப்பு நாணயங்கள் கிடைத்தன. அவற்றில் பிறையும் மூன்று வளைவு முகட்டுச் சின்னமும் ஒரு பக்கம் அச்சிடப்பட்டு இருந்தன. அந்நாணயங்கள் மௌரியர் காலத்தவை என டாக்டர் துர்கா பிரசாத் கருதுகிறார். 1

இராம்பூர்வா என்ற இடத்தில் அசோகர் நிறுவிய தூணில், தூணையும் அதற்கு மேல் வைக்கப்பட்டு இருந்த பெரிய சிங்க உருவத்தையும், இணைப்பதற்குப் பயன்பட்ட செப்பு ஆணி ஒன்று கிடைத்துள்ளது. அந்த ஆணியில், பிறையும் மூன்று வளைவு முகடும் கொண்ட சின்னம் பொறிக்கப்பட்டு இருந்தது. அதனால் அச்சின்னம் மௌரியரின் சின்னம் என்று உறுதிப்படுத்தப்பட்டது. 2

சந்திரகுப்த மௌரியர்தான் முதன் முதலில் அச்சின்னத்தைப் பயன்படுத்தி இருக்க வேண்டும் என்றும், அவர் வழிவந்தவர்கள் அச்சின்னத்தைத் தொடர்ந்து பயன்படுத்தினர் என்றும் டாக்டர் ஜெயஸ்வால் என்ற அறிஞர் கருதுகிறார். 3 இக்கருத்தை டாக்டர் கோசாம்பியும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். 4 அசோகனுடைய காலத்தில்தான் அந்த இலச்சினை வெள்ளி முத்திரை நாணயங்களின் பின்புறத்தில் பதிக்கப்பட்டு இருக்க வேண்டுமென்று டாக்டர் பி.எல்.குப்தா கருதுகிறார்.

மேலே கூறியுள்ள காரணங்களினால், அச்சின்னத்தை மௌரியர்களின் சின்னம் என்று எல்லா வரலாற்று அறிஞர்களும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

மௌரிய மன்னர்களின் தென்னகப் படையெடுப்பைக்குறித்துச்சங்க இலக்கியங்களில் குறிப்புக்கள் உள்ளன. தமிழகத்தில், மாம்பலம்,

---

1 Durga Prasad —Numismatic Supplement XIVII —pp.62-6.

2 Pancham Neogi —Copper in Ancient India —page.18-20.

3 Jayaswal —Journal of the Bihar and Orissa —Research Society —Patna —1934-282-288.

4 Kosambi D.D. Indian Numismatics —page.26.

தொண்டமனாட்டம், கவுனியண்குட்டை, தாராபுரம், வெம்பாவூர், வீரசிகாமணி ஆகிய ஊர்களில் மௌரியப் பேரரசால் வெளியிடப் பட்ட முத்திரை நாணயப் புதையல்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக சந் திரகுப்தர், பிந்துசாரர், அசோகர் காலத்தைச் சார்ந்தவை அவை. இவற்றின் காலத்தைக் கி.மு.3 ஆம் ஆண்டு முதல் கி.மு. 175 வரை என்று குறிப்பிடலாம். இவற்றில் எல்லாம் மூன்று வளைவு முகடும் அதன் மேல் பிறையும் கொண்ட சின்ன முத்திரைகள் உள்ளன.

நந்தர்களின் முத்திரை நாணயங்கள் பரவலாகக் கிடைத்திருப்பி னும், மௌரியர்கள் வெளியிட்ட முத்திரை நாணயங்களே பெருமள வில் தமிழகத்தில் கிடைத்துள்ளதால், அக்குறிப்பிட்ட கால கட்டத் தில் தமிழகத்துடன் மௌரியர்கள் மிக நெருக்கமான வாணிகத் தொடர்பை வைத்திருந்தனர் என்பது உறுதியாகிறது.

ஆனால், முதன் முதலாக மௌரிய இலச்சினை உள்ள பாண்டியர் காசு இப்பொழுது தான் ஆய்வு செய்யப்படுகின்றது. பாண்டியன் பெரு வழுதி, தன் நாணயத்தின் பின்புறத்தில் மீன் இலச்சினையையும், முன் புறத்தில் வேறு பல இலச்சினைகளுடன் மௌரிய இலச்சினையும் பதித்து உள்ளமை, மௌரியர்களுடன் ஏற்பட்ட இறுகிய நட்பின் அடையாளமாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. மௌரியர்களின் ஆட்சிக் காலம் கி.மு.320 முதல் கி.மு.175 வரையி லான காலமாகும். இதனால் இந்த நாணயத்தின் காலத்தை கி.மு.3 அல்லது கி.மு. 2 என்று உறுதியாகக் கூறலாம்.

## சோகுர வெண்கலத் தகடும் -பெருவழுதி நாணயங்களும்

சோகுர வெண்கலத் தகட்டிலுள்ள சின்னங்களுக்கும் பெருவழுதி நாணயச் சின்னங்களுக்கும் பேரளவு ஒற்றுமை இருப்பதைக் கண்டோம். அத்தொன்மையான காலத்திலேயே இந்திய நாடு முழுவ தும் சில சின்னங்களுக்குப் பொதுவான மரியாதையும், மதிப்பும் பொதுமக்களிடையே இருந்து வந்திருக்கின்றன என்பதை உணர முடி கின்றது.

சோகுர வெண்கலத் தகடு கி.மு.3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று அறிஞர்கள் கருதுவதை ஏற்கனவே குறிப்பிட்டு உள்ளோம். எனவே பெருவழுதி நாணயங்களின் காலத்தையும், அத்தகட்டின் காலத்தை ஒட்டியதாக மதிப்பிடுவதில் தவறில்லை.

இதுவரை ஆராய்ந்து கண்டவற்றால் பெருவழுதி நாணயங்களின் காலத்தை கி.மு.3 ஆம் நூற்றாண்டு என்றோ, கி.மு.2 ஆம் நூற் றாண்டு என்றோ சொல்வதில் ஏதும் பிழை ஏற்பட்டு விடாது.

# 9. கோயில் சின்னப் பெருவழுதி நாணயங்களும் அடும்பரா நாணயங்களும்

வட இந்தியாவில் தற்போதுள்ள பஞ்சாப், அரியானா, இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட நாணயங்கள் பல கிடைத்துள்ளன. அக்காலக் கட்டத்தில் வாழ்ந்த பழங்குடி மன்னர்களால் வெளியிடப்பெற்ற அவற்றை இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேய அறிஞர்கள் பலர் ஆய்வு செய்துள்ளனர். அவ்வாறு ஆய்வு செய்த அறிஞர்கள் அவற்றை ஓரின மக்கள் வெளியிட்ட நாணயங்களாகக் கொண்டு 'Tribal Coins' என்று பெயரிட்டனர்.

'Tribe' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு, குலமரபுக்குழு, இன மரபுக்குழு, நாகரிகத் தொடக்க காலச் சமுதாயம், நாகரிக மற்ற இனக்குழு என்பன போன்ற பொருள் விளக்கங்களை அகராதியில் காணலாம். ஒரே வகையான நெறித் தொடர்புடன் வாழும் மக்களையே ஓரினக் குழு மக்கள் என்று நாணயவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

அத்தகைய ஓரினக்குழு நாணயங்களில் அடும்பரா நாணயங்கள் பெரிதும் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன.

அவை பஞ்சாப் மாநிலத்திலுள்ள குருதாஸ்பூர் மாவட்டத்தின் ஒரு பகுதியில் வாழ்ந்த பழங்குடி மன்னர்களால் வெளியிடப்பட்டவை.

அடும்பரா நாணயங்கள் சிலவற்றில் மூன்றடுக்குள்ள கோயில் சின்னமும், அதன் எதிரே, திரிசூலச் சின்னமும் உள்ளன. இச்சின்னம் குறித்து முதன் முதலாக ஆய்வு செய்த அறிஞர் எஸ்.வி. சொகோனி இந் நாணயங்களிலுள்ள மூன்றடுக்குச் சின்னம் கோயில் சின்னமென்றும், கோயிலின் எதிரே இருப்பது வெட்டரிவாளுடன் கூடிய திரிசூலச் சின்னமென்றும் கூறியிருக்கிறார். இவை இரண்டும் சேர்ந்து ஒரு சிவன் கோயிலைக் குறிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (1).

இச்சின்னங்கள் குறித்து அறிஞர் ஏ.எஸ். அல்டேகர் கருத்துக் கூறுகையில், அடும்பரா நாணயத்திலுள்ள சிவன் கோயில், மிகத் தொன்மையான சிவன் கோயில் வடிவத்தைப் பிரதிபலிப்பதாகக் கூறியுள்ளார். (2)

---

1. S.V. Sohoni I.C.S. Patna, J.N.S.I. Vol.IV 1942.
2. A.S.Altekar —Editor's note —J.N.S.I Vol.IV 1942.

அடும்பரா நாணயங்களின் காலம் கி.மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று நாணயவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். (1)

புகைப்படம்





வரைபடம்





இங்கு ஒப்பு நோக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள அடும்பரா நாணயங்கள் செம்பாலான சதுர வடிவுடையவை. நாணயத்தின் முன்புறம் இடப்புறத்தில் வேலியிட்ட மரமும், வலப்புறத்தில் மரத்தை நோக்கி நிற்கும் யானையும் உள்ளன. பின்புற இடப்புறத்தில் மூன்றடுக்குள்ள மண்டபமும், வலப்புறம் வெட்டரிவாளுடன் கூடிய திரிசூலமும் காணப்படுகின்றன. முன்புறத்தில் கரோஷ்டி மொழியில் உள்ள ஒரு சொற்றொடரும் பின்புறத்தில் பிராமி மொழியிலான ஒரு சொற்றொடரும் காணப்படுகின்றன.

இவை போன்ற சின்னங்கள் கொண்ட பாண்டியர் நாணயமொன்று கந்தரோடையில் கிடைத்ததைக் குறித்து ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது. (2) இவையிரண்டிற்கும் உள்ள ஒற்றுமைக் கூறுகளை இனி ஆராய்வோம்.

---

(1) Das Gupta K.K. —A Tribal History of Ancient India p.57

(2) Pieris P.E. Royal Asiatic Society, Ceylon Branch, Vol. XXVIII, 1919.

பெருவழுதி நாணயம்

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

**மேல்வரிசை:**
இடப்புறம் மூன்று முகடுள்ள மலை
நடுவில் —பிறை வடிவுக் கூரைக் கோயில்.
வலக்கோடி —வேலியிட்ட மரமாக இருக்கலாம் —தெளிவாக இல்லை.

**கீழ்வரிசை:**

இடப்புறம்: கொடி மரத்தின் ஒரு பகுதி.
நடுவில்: யானைச் சின்னம்.

வடக்கோடி: வெட்டரிவாளுடன் கூடிய திரிசூலம் ஒரு பீடத்தின் மேல் நடப்பட்டது போல உள்ளது. பீடத்தில் கடல் ஆமைச்சின்னம்.

அடும்பரா நாணயங்களில் காணப்படும், கோயிலும் திரிசூலமும் கந்தரோடைப் பெருவழுதி நாணயத்திலும் காணப்படுகின்றன. யானை இரண்டிற்கும் பொதுவாக உள்ளது.

அடும்பரா நாணயத்திற்கும், பெருவழுதி நாணயத்திற்கும் இச்சின்னங்களினால் அரிய ஒற்றுமை ஏற்படுவதைக் காணலாம்.

சின்னங்கள் இருக்குமிடந்தான் மாறுபட்டுள்ளதே தவிர வேறு எந்த மாற்றமுமில்லை. இவ்வொற்றுமை குறித்து ஏற்கனவே அறிஞர் பி.ஈ. பெரிஸ் அவர்கள் இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (1)

கோயில் சின்னப் பெருவழுதி நாணயங்களில் காணப்படும் முக்கோண வடிவிலான கூரையைப் போல் அடும்பரா நாணயத்திலும் உள்ளது. (2). அறிஞர் பி.ஈ. பெரிஸ் கட்டுரை எழுதிய காலத்திற்கு பின் இந்த நாணயம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்நாணயத்தின் வரைபடம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



புகைப்படம்



வரைபடம்

அடும்பரா நாணயங்களின் காலத்தை அடிப்படையாகக் கொண்டு கோயில் சின்னப் பெருவழுதி நாணயங்களின் காலத்தை கணக்கிட்டால் அவை கி.மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தனவாக இருக்கலாம் என்ற முடிவிற்கு வரமுடியும்.

---

(1) Pieris P.E. Nagadipa and Buddhist Remains in Jaffna -Journal No.72. Part II Vol.XXVIII 1919. Page.11

(2) S.S.Singh —Early Coins of North India —An Iconographic Study —Plate XVI a-b-Coin 11.

# 10. பெருவழுதி வேள்வி நாணயங்கள்

அரசர்களுக்கு ஓதல், வேட்டல், ஈதல், படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பல் என்ற ஐவகைத் தொழில்களைத் தொல்காப்பியமும் அர்த்தசாத்திரமும் குறிப்பிட்டுக் கூறுகின்றன. இவற்றில் வேட்டல் என்னும் வேள்வி செய்தலைத் தமிழ் மூவேந்தர்களும் பரம்பரை பரம்பரையாகவே செய்து வந்திருக்கின்றனர். *(1)*

'வேள்வியிற் கடவுள் அருத்தினை' என்று பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேர மன்னன் புகழப்படுகின்றான். 'இராசசூயம் வேட்டவன்' என்று பெருநற்கிள்ளி என்ற சோழ மன்னன் சிறப்பித்துப் பேசப்படுகின்றான். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும் பல வேள்விகளைச் செய்ததால் அப்பெயர் பெற்றுப் பெரும்புகழ் பெற்றான். வேள்வியால் பெற்ற புகழ் பாண்டியருக்குத் தொன்று தொட்டே இருந்து வந்துள்ளது.

இவ்வரசர்களில் ஒருவன் அசுவமேத யாகம் செய்து முடித்து நின்ற போது அகத்திய முனிவர் அவனிடம் வந்து அவனை ஆசீர்வதித்ததாக மகாகவி காளிதாசரும் இரகுவம்சத்தில் கூறுகின்றார். *(2)*

'அசுவமேதயாகம்' என்ற வேள்வி முறை வேதகாலத்தில் தோன்றியது. ஒப்பற்ற பெருமன்னன் என்ற புகழையும், பெயரையும் பெற ஒரு மன்னன் செய்ய வேண்டிய வேள்விகளில் ஒன்றாக அசுவமேத யாகமும் அமைந்திருந்தது.

வேதத்திலும், பிற சாத்திரங்களிலும், இவ்வேள்வி குறித்துப் பல செய்திகள் காணப்படுகின்றன.

இந்த வேள்வியை ஒட்டிய சடங்குகள் ஓர் ஆண்டுக் காலம் நடைபெறும். வேள்வியைத் தொடங்கு முன் கரிய நிற மானைப் போன்ற குதிரையைத் தேர்ந்து எடுப்பார்கள். *(3)*

சடங்குகள் முடிந்த பின் அக்குதிரையை அவிழ்த்து விட்டு விட்டு அதன் பின்னே ஒரு படையும், அதன் படைத் தலைவனும் பின் தொடர்ந்து செல்வார்கள். அப்படைத் தலைவன் அரசனுக்கு மிக

---

1. மு.இராகவையங்கார் —இலக்கியக் கட்டுரைகள் பக்கம் 47.
2. மு.இராகவையங்கார் —இலக்கியக் கட்டுரைகள் பக்கம்.47.
3. CARAVAN —July 1st 1985 —Asvameda Yagna at Hydrabad.

வேண்டியவனாக இருப்பான். இராமபிரான் இத்தகைய வேள்வியைச் செய்த போது, இலக்குவனை இப்பொறுப்பில் அமர்த்தினார். மகாபாரதப் போர் முடிந்த பின்னர் தருமர் நடத்திய அசுவமேத யாகத்திலும் இந்தப் பொறுப்பு அர்ச்சுனனுக்கே வழங்கப்பட்டது.

வேற்று மன்னர் ஆட்சி புரியும் நாடுகளுக்கு வேள்விக் குதிரை செல்லும்போது அந்நாடுகளில் எவ்வித எதிர்ப்பும் இல்லாவிட்டால் அந்நாட்டு மன்னர்கள் வேள்வி மன்னரைத் தம் மேலாதிக்க மன்னராகவே ஏற்றுக் கொள்வர். (1)

ஆதிக்கத்தை ஏற்க விரும்பாத மன்னன் வலம் வரும் குதிரையை பிடித்துக் கட்டி விடுவான். அப்படிச் செய்து விட்டால், பிடித்துக் கட்டிய மன்னன் வேள்வி மன்னனுடன் போர் செய்ய நேரிடும். அவ்வாறு நடக்கும் போரில் வேள்வி மன்னன் தோல்வியைத் தழுவினால் தன் வேள்வியை அத்துடன் நிறுத்தி விட்டுத் தனது பெருமன்னன் பட்டத்தையும் நீக்கிக் கொள்ள நேரும்.

இதற்கு மாறாக, வேள்வி தொடங்கிய ஓராண்டுக்குள் குதிரையை யாரும் பிடித்துக் கட்டா விட்டால், வேள்வி மன்னன் அக்குதிரையை வேள்விச் சாலைக்குக் கொணர்ந்து வேள்வியை நிறைவு செய்து குதிரையைப் பலியிடுவான்.

**குதிரையும், யூபத்தம்பமும்:**

அசுவமேத வேள்வி நடைபெறும் இடத்தில் குதிரையைக் கட்ட யூபத்தம்பம் என்ற தூண் இருக்கும். வேள்வித் தீ வளர்க்கத் தொட்டி போன்ற வேள்விக் குண்டமும் இருக்கும்.

**பாண்டியர் வேள்வி நாணயங்கள்:**

முன்புறம் வேள்விக் குதிரை, யூபத்தம்பம், தீக்குண்டம், வேலியிட்ட மரம், நந்தி பாதம் முதலிய சின்னங்களும், பினபுறம் மீன் சின்னங்களும் கொண்ட நாணயங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் பெயர் எதுவும் காணப்படவில்லை. எனவே இன்ன மன்னன்தான் இதனை வெளியிட்டவன் என்று அறுதியிட்டு உறுதி கூற முடியவில்லை. ஆனால் சங்ககாலப் பாண்டியனான பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பல வேள்விகள் செய்தவன் என்பதைச் சங்க இலக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. அந்த அடிப்படையில் கீழே விளக்கப் பட்டு இருக்கும் நாணயங்களைப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வெளியிட்டு இருக்கலாம் என்று கொள்வதில் ஏதும் தவறில்லை.

---

(1) CARAVAN —July 1st 1985 —Asvameda Yagna at Hydrabad.

நாணயம்:1

<table>
<tr><td>முன்புறம்</td><td>புகைப்படம்</td><td>பின்புறம்</td></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="3">வரைபடம்</td></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
</table>

செப்பு நாணயம் அளவு நீளம் 2 செ. அகலம் 2 செ. எடை 5.700 கிராம்.

முன்புறம்:
இதன் முன்புறத்தில் இடப்பக்கம் ஒரு குதிரை நின்று கொண்டிருக்கிறது. அதன் மேல் வேலியிட்ட மர வடிவம் ஒன்று உள்ளது.

குதிரையின் முன்னே யூபத்தம்பம். தம்பத்தில் மூன்று வளைந்த அடுக்குகள் உள்ளன. வலப்பக்க நடுவில் யாக குண்டத்தின் ஒருபகுதி காணப்படுகிறது. குதிரையை யூபத்தூணுடன் பிணைத்து அதன் பின் அக்கயிற்றை வேள்விக் குண்டத்துடன் இணைக்கப்பட்டு உள்ளதைக் காணலாம்.

பின்புறம்: மீன் சின்னம்.

நாணயம் 2:

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| **வரைபடம்** | |
|  |  |

செப்பு நாணயம். அளவு நீளம் 1.7 செ. அகலம் 1.7 செ. எடை 6.700 கிராம்.

முன்புறம்: இந்நாணயத்தின் முன்புறத்தில் இடப்பக்கம் ஒரு குதிரை நின்று கொண்டிருக்கிறது. அதன் மேல் வேலியிட்ட மரத்தின் ஒருபகுதி மட்டும் தெரிகிறது.

குதிரையின் முன் யூபத்தம்பம் நிற்கிறது. தம்பத்தில் குடை போன்று மூன்று வளைவுகள் உள்ளன. நாணயத்தின் வலப்பகுதியில் வேள்விக் குண்டமும் அதன் மேல் மூன்று வளைவுள்ள முகடும் உள்ளன. குதிரையின் காலில் ஒரு கயிறு கட்டப்பட்டு அக்கயிறு யூபத்தூணுடன் பிணைக்கப்பட்டு, மூன்று வளைவுள்ள முகட்டுடனும் இணைக்கப்பட்டு உள்ளது.

பின்புறம்: மீன் சின்னம்.

நாணயம் 3:

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| வரைபடம் | |
|  |  |

செப்பு நாணயம் அளவு நீளம் 2 செ. அகலம் 1.7 செ. எடை 5.700 கிராம்.

முன்புறம்: இடப்பக்கம் குதிரை நின்று கொண்டிருக்கிறது. அதன் எதிரே யூபத்தம்பம். தம்பத்தில் ஒரு குடை வளைவு மட்டும் உள்ளது. வலப்பக்கம் கீழ்ப்பகுதியில் நந்திபாதம். அதன் மேல் அறுபக்கம் உள்ள யாக குண்டமும் அதற்கு மேலாக மூன்று வளைவுள்ள முகட்டின் அடிப்பகுதியும் காணப்படுகின்றன.

பின்புறம்: மீன் சின்னம்.

நாணயம் 4:

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| **வரைபடம்** | |
|  |  |

செப்பு நாணயம் அளவு நீளம் 1.5 செ. அகலம் 1.5 செ. எடை 2.800 கிராம்.

முன்புறம்: இடப்பக்கத்தில் யூபத்தம்பமும், அத்தம்பத்தில் குடை வளைவிற்குப் பதிலாக நீண்ட சதுர வடிவத்தைக் காண்கிறோம். வலப் பக்கத்தில் ஒரு குதிரை யூபத்தம்பத்தை நோக்கி நின்று கொண்டிருக்கிறது.

இடப்புறம்: மீன் சின்னம்.

### சின்னங்கள் உணர்த்தும் செய்திகள்:

*வேலியிட்ட மரம்:*



தொன்மைக்கால இந்திய மக்கள் தெய்வங்களையும், மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்திகளையும் புனிதமாகக் கருதினர். மரங்களில் தெய்வங்கள் வந்துறைவதாக நம்பினர். மோகஞ்சதாரோ, அரப்பா ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டு உள்ள முத்திரைகளில் மர வழிபாடு பெரிய அளவில் இருந்ததைக் காண முடிகிறது.

அத்தகைய சின்னங்களில் சுவர் அடைப்பிற்கு உள்ளிருந்தோ வேலி அடைப்பிற்கு உள்ளிருந்தோ மரங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன. (1)

சிந்து சமவெளி அகழ்வாய்வில் கிடைத்த முத்திரைகளில் மரச்சின்னங்கள் பொறிக்கப்பட்டு உள்ளன. அவற்றிலிருந்து மரவழிபாடு ஆரியர் வருகைக்கு முன்பிருந்த மக்களின் வழிபாட்டு முறையாக இருந்து வந்திருக்கிறது என்று கருதலாம். (2)

அப்பழங்குடியினரின் வழிபாட்டு முறைகள் பிற்காலத்தில் தோன்றிய சமயங்களுடன் பின்னிப் பிணைந்து விட்டன. மரவழிபாட்டைப் புத்தர், சமணர், இந்து ஆகிய எல்லாச் சமயத்தவரும் ஏற்றுக் கொண்டு பின்பற்றத் தொடங்கினர்.

தொன்மையான இந்திய நாணயங்களில் காணப்படும் குறியீடும், அடையாளங்களும் உண்மையில் சிந்து சமவெளி நாகரிகம் தொடர்ந்து நிலை பெற்றிருந்ததையே நமக்கு எடுத்துச் சொல்கின்றன. (3)

---

1. Shatrugha Sharan Singh—Early Coins of North India—An Iconographic Study.
2. Cunnigham.A.Coins of Ancient India—p.68.
3. Fabri C.C. JRAS. 1935. p.p. 307-308.

**நந்தி பாதம்**

நந்தி பாதம் ஒரு சைவ சமயச் சின்னமாகவே கருதப்படுகிறது. இச் சின்னம் தொன்மையான நாணயங்களில் திமிலுடன் கூடிய எருதுடன் அதிகமாகக் காணப்படும். திமிலுடன் கூடிய எருதினைச் சிவன் என்றே இந்துக்கள் கருதினர். இன்றும் கருதுகின்றனர்.



சில நேரங்களில் இச் சின்னம் குதிரை அல்லது யானையுடன், தொன்மை நாணயங்களில் தோன்றுவதுமுண்டு. இந்த நந்திபாதச் சின்னத்திலிருந்து தான் மூவிலை அல்லது திரிசூலச்சின்னம் வளர்ச்சி யடைந்தது என்று கூறப்படுகிறது.

ஒரு சிறு வட்டத்தின், இருபுறமும் புள்ளிகளும், அதன் மேலாக மூன்று பிரிவுகளுடைய திரிசூலமுமாக இலங்குவதே நந்திபாதச் சின் னமாகும்.

இந்தச் சின்னத்தின் மேற்பகுதியை மட்டும் தனியே அகற்றிப் பார்த் தால் அது சிவபெருமானின் திரிசூலத்தைப் போலவே தோன்றும்.

சிந்து வெளி நாகரிகத்தில் இருந்து வந்த சிவ வழிபாடும், தாய்த் தெய்வ வழிபாடும், அதற்குப் பின்னரும் தொடர்ந்து பின்பற்றப் பட் டது. கி.மு. 4ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரை கிடைத்துள்ள நாணயங்களில் காணப்படும் குறியீடுகளும், அடையா ளங்களும் இதை நமக்கு உணர்த்தி நிற்கின்றன. (1)

**மலைச்சின்னம்**

மூன்று வளை முகடுகளைக் கொண்டும், வளை முகடுகளின் மேல், பிறை வடிவம் கொண்டதுமான முத்திரை வார்ப்பட நாணயங்களும் கிடைத்துள்ளன.



---

1. Shatrugha Sharan Singh—Early Coins of North India—An Iconographic Study.

இச்சின்னங்கள் மலை வடிவமென்று கருதப்படுகிறது. நாடு முழுவதிலும் கண்டெடுக்கப்பட்டுள்ள தொன்மையான நாணயங்களில் இச்சின்னத்தைக் காண முடிகிறது. சில முத்திரை நாணயங்களில் இந்த மலைச்சின்னம் ஆறுவளைவுகள் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. வட இந்தியாவில் கிடைத்துள்ள பல நாணயங்களில் பிறையுடன் கூடிய மூன்று வளை முகடுகள் காணப்படுகின்றன. எனவே இந்த வகைச் சின்னங்கள் மௌரிய அரசர்களின் ஆட்சிச் சின்னமாக இருந்திருக்கலாம் என்று பரவலாகக் கருதப்படுகிறது.

ஆனால் பல்வேறு அறிஞர்கள் இதனைச் சிவபெருமானது இருப்பிடமான இமயமலை என்றே கருதுகின்றனர். சிவனைக் கைலாசபதி என்று அழைப்பதை இங்குக் கருதிப்பார்க்க வேண்டும்.

மலைகளும், குன்றுகளும் மனிதனுக்கு உணவளித்து உடை கொடுத்து, உறங்க இடமளித்த உதவியை மறக்காமலும் குகைகளில் வாழ்ந்ததையும் நினைவில் வைத்துக் கொள்ள மனிதன் செய்த நன்றிக் கடனாகவே தொன்மைக் காலச் சமய நம்பிக்கைகளில் மலைச்சின்னங்கள் இடம் பிடித்துக் கொண்டன என்று கருதலாம். (1)

கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த யுதேயா நாணயங்களுடன் பெருவழுதி வேள்வி நாணயங்கள் பெருமளவில் ஒத்திருக்கின்றன. பாணினி குறிப்புக்களின்படி யுதேயர்கள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே இருந்திருக்கின்றனர் என்பதும் படைத் தொழில் மறவர்களாக அவர்கள் வாழ்க்கை நடத்தியிருக்கின்றனர் என்பதும் தெரிய வருகின்றன. இப்போதைய பஞ்சாப் அரியானா மாநிலப் பகுதிகளில் அவர்கள் வாழ்ந்திருக்கின்றனர்.

மௌரியரின் மேலாட்சிக்கு உட்பட்ட குறுநில மன்னர்களாக இருந்தனர். மௌரிய ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு அவர்களும் அவர்களுடன் இன்னும் சில பழங்குடியினரும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் விடுதலை பெற்றுத் தனியாட்சி புரிந்த செய்தியை நாணயங்கள் பல நமக்கு உணர்த்தி நிற்கின்றன. அவர்கள் கார்த்திகேயனைத் தங்கள் குலமுதற்கடவுளாகவும் போர் முறைக் கடவுளாகவும் கொண்டிருந்த செய்தி மிகமுக்கியமான செய்தியாகும். கி.மு. 2-3 நூற்றாண்டுகளில் கார்த்திகேயன் உருவம் பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ளமை இதனை நன்கு வலியுறுத்தும் (2)

தமிழ்க் கடவுளான ஆறுமுகனையே வடநாட்டினர் கார்த்திகேயன் என்று அழைத்தனர். இன்றும் அழைக்கின்றனர்.

---

1 Shatrugha Sharan Singh—Early Coins of North India—An Iconographic Study.

2 Das Gupta K.K. A Tribal History of Ancient India. A Numismatic Approach p.211.

யுதேயா நாணயம்

புகைப்படம்





வரைபடம்





முன்புறம்: யூபத்தை நோக்கி நிற்கும் குதிரை.

பின்புறம்: வலப்பக்கம் நோக்கி நிற்கும் யானை.
யானையின் மேல் நந்திபாதச் சின்னம்.
இதன்காலம் கி.மு. முதல் நூற்றாண்டு. (1)

குதிரை, யூபத்தம்பம், நந்திபாதம் ஆகிய சின்னங்கள் உள்ள யுதேயா நாணயத்தின் காலத்தை கி.மு. முதல் நூற்றாண்டாகக் கருதுகின்றனர். இதனால் பெருவழுதி வேள்வி நாணயங்களும் கி.மு. முதல் நூற்றாண்டிலோ அதற்கு முன்னர் இரண்டாம் நூற்றாண்டிலோ வெளியிடப்பட்டவை என்று கொள்வதில் ஏதும் தவறில்லை.

1. Das Gupta K.K. A Tribal History of Ancient India -A Numismatic Approach -Page.211.

# 11.பெருவழுதித்தலை நாணயங்கள்

பெருவழுதி மன்னன் வெளியிட்ட தலை வடிவ நாணயங்கள் சில கிடைத்துள்ளன. அவை சதுர வடிவிலான செப்பு நாணயங்கள். அவற்றில், பெங்களூரைச் சார்ந்த திரு.சுப்பிரமணியம் அவர்களின் தொகுப்பிலுள்ள இரண்டு நாணயங்களை முதலில் ஆய்விற்கு எடுத்துக் கொள்வோம். அந்நாணயங்களில் தலை வடிவங்கள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. [1]

நாணயம் 1:

செப்பு சதுர நாணயம். நீள, அகல அளவும், எடையும் தெரியவில்லை.

| முன்புறம் | புகைப்படம் | பின்புறம் |
| --- | --- | --- |
|  | |  |
| | வரைபடம் | |
|  | |  |

முன்புறம்:

மன்னரின் தலைவடிவம் வலப்பக்கம் நோக்கியுள்ளது. சுருண்ட முடி. மன்னரின் மூக்கு கூர்மையான நுனியுடன் நீண்டு காணப்படுகிறது. தடித்த மேல் உதடு. முகத்தில் நடுத்தர வயதின் தோற்றம். தலை வடிவத்தைச் சுற்றிலும் முத்துப்பரல் வட்டம்.

1. இந்த நாணயத்தின் உரிமையாளர் -திரு.சுப்ரமணியன் -பழக்கடைத் தெரு, காமராஜர் சாலை, பெங்களூர்.

பின்புறம்:

நீண்ட சதுரத் தொட்டி. தொட்டியில் இரண்டு ஆமைகள் தெளி வாகத் தெரிகின்றன. தொட்டியின் மேல் ஆறு புள்ளிகள் உள்ளன. வேறு சின்னங்கள் தெளிவற்று உள்ளன.

நாணயம்: 2

புகைப்படம்




வரைபடம்




செப்பு சதுர நாணயம். நீள, அகல அளவும், எடையும் தெரிய வில்லை.

முன்புறம்:

முன்புறம் மன்னரின் தலை வடிவம் வலப்பக்கம் நோக்கியுள்ளது. மன்னரின் மூக்கு கூர்மையான நுனியுடன் நீண்டு காணப்படுகிறது. முகத்தில் முதிர்ச்சியின் தோற்றம் தெரிகிறது.

பின்புறம்:

நீள் சதுர வடிவிலான ஒரு தொட்டி. அதில் இரண்டு கடல் ஆமைகள் தெளிவாகத் தெரிகின்றன.

நாணயம்: 3

செப்பு சதுர நாணயம்: அளவு: 1.6 செ.மீ. 1.6 செ.மீ. எடை: 6.300 கிராம்

| புகைப்படம் | |
|---|---|
|  |  |
| **வரைபடம்** | |
|  |  |

முன்புறம்: மன்னரின் தலை வடிவம் வலப்பக்கம் நோக்கியுள்ளது. தலையைச் சுற்றி, தெளிவற்ற வட்டவடிவமான சுற்றுப்பட்டை போன்ற அமைப்பு காணப்படுகிறது.

தலையின் பின்பக்கத்தில் அணிகலன்களாலாகிய முடிச்சொன்று காணப்படுகிறது. மன்னரின் மூக்கு கூர்மையான நுனியுடன் நீண்டு காணப்படுகிறது. கண் உள்ளடங்கியும், உதடுகள் பெரிதாகவும் உள்ளன.

பின்புறம்: நீள் சதுர வடிவிலான ஒரு தொட்டி. அத்தொட்டியில் நான்கு கடல் ஆமைகள் காணப்படுகின்றன. அவற்றில் மூன்று மட்டுமே தெளிவாக உள்ளன. தொட்டியின் மேலாக வலப்பக்கம் நோக்கி நிற்கும் யானை ஒன்றைக் காண முடிகிறது.

பெருவழுதித் தலை நாணயங்களின் காலத்தைக் கணிப்பதற்கு முன், மன்னர் தலை நாணயங்களின் தோற்றம், வளர்ச்சி குறித்தும், அவை இந்திய நாட்டிற்கு எக்காலத்தில் வரத் தொடங்கின என்பதைக் குறித்தும் ஆராய்ந்து பார்ப்பது பொருத்தமுடையதாகும்.

முதன் முதலில் கிரேக்கர்களே, தலை வடிவம் கொண்ட நாணயங்களை வெளியிட்டனர். அலெக்சாண்டர் இந்திய நாட்டின் வட மேற்குப் பகுதியை அடிப்படுத்தி வெற்றி கொண்டமை கிரேக்க மக்களிடையே பெரிய எழுச்சியை ஏற்படுத்தியது. அலெக்சாண்டர் கி.மு. 323 ஆம் ஆண்டு காலமாகிய பின்னர், அவர் நினைவாக அவரது தலை வடிவ நாணயங்களைக் கிரேக்கர்கள் வெளியிட்டனர். அந்நாணயத்தில் அலெக்சாண்டரின் காதருகே ஆட்டின் சுருண்ட கொம்பின் வடிவம் பொறிக்கப்பட்டு இருப்பது தனித்தன்மை உடையது. 1



Silver Coin of Alexander wearing

the horn of Amman. 2

இவ்வாறு ஒரு மன்னரைச் சிறப்பித்து அவரது மரபினர் அவரது தலை வடிவ நாணயங்களை வெளியிட்டு வந்த நிலை மாறி, மன்னர்களே தங்கள், தங்கள் வடிவ நாணயங்களை, தங்கள் ஆட்சிக் காலத்திலேயே வெளியிடத் தொடங்கினர். இந்த வழக்கம் கி.மு. 305 ஆம் ஆண்டிற்குப் பிறகே தொடங்கியது. 3

இம்முறையைப் பின்பற்றி அலெக்சாண்டரின் வழிவந்த சிலர், தங்களைத் தாங்களே மன்னர்கள் என்று அறிவித்துக் கொண்டு தங்கள் உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட்டுக் கொண்டனர். இதனால் நாட்டு மக்களிடம் இவர்களின் பெயர் நன்கு விளம்பரம் பெற்றது. இதன் காரணமாக, மன்னர் தலை நாணய வெளியீடு விரைவில் பரவியது. 4

ஆப்ரிக்கக் கண்டத்திலிருந்து, இந்தியத் துணைக் கண்டம் வரை கிரேக்க மன்னர்களின் தலைவடிவ நாணயங்கள் புகழ் பெறலாயின. 5

1. Robin Lane Fox -The Search for Alexander -Page 201.
2 a) Ibid -Page 203
3. Susase Walker and Andrew Burnett —The Image of Augustus —British Museum publication —page.4
4. Ibid Page -4.
5. Ibid Page -4.

அலெக்சாண்டர் இறந்து ஒரு நூற்றாண்டுக் காலம் ஆன பின்னர், பாக்டீரிய நாட்டிலிருந்து மீண்டும் இந்திய நாட்டின் மீது படையெடுத்து இந்தியாவின் வடமேற்குப் பகுதியைக் கைப்பற்றினா. 1

பாக்டீரியாவிலிருந்து முதலில் அரசாண்ட கிரேக்கர்கள் தம்முள் பிளவுபட்டு இரு பிரிவாகி ஆளத் தொடங்கினர். யூகிரிதிதெஸ் (கி.மு.175-155) பாக்டீரியப் பகுதியை ஆட்சி புரிய, தெமித்ரியஸ் (கி.மு. 190-171) பஞ்சாப் பகுதியை ஆண்டு வந்தார். 2

இவருள் யூகிரிதிதெஸ் ஏராளமான வெள்ளி, செப்பு நாணயங்களை வெளியிட்டார். அவை சதுர வடிவிலும், வட்ட வடிவிலும் உள்ளன. அவர் வெளியிட்ட நாணயத்தில் ஒரு பக்கம் தன் தலை வடிவத்தைப் பொறிக்கச் செய்துள்ளார். தலையில் கவசம் காணப்படுகிறது. கவசத்தில் காளையின் காதும், கொம்புச் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளன. 3



Eucratides -I

தெமித்ரியஸும் தன் தலை பொறிக்கப்பட்டுள்ள நாணயத்தை வெளியிட்டுள்ளார். தலையின் மீது யானையின் முகவடிவமுள்ள ஒரு கவிகை காணப்படுகிறது. 4



Demitrius I

1. R.Vanaja -Indian Coinage -page 8.
2. Ibid -page 8.
3. Ibid -page 8.
4. Ian Carradice –Ancient Greek portrait Coins. British Museum Publication. page 14 -Picture 53.

தெமித்ரியஸ் இறந்த பிறகு, அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த மன்னர் யார் என்று தெரியவில்லை. ஆனால் அம்மரபில் வந்த மன்னர் இருவரின் நாணயங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் அழகான தலை வடிவ நாணயம் யுதேடிமஸ் II என்ற மன்னரால் வெளியிடப் பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. 1



Euthydemus -II

இதனை அடியொற்றி மற்றொரு சிறப்பான நாணயமொன்றை ஆன்டிமிக்கெஸ் I (கி.மு. 190 -180) மன்னர் வெளியிட்டுள்ளதையும் இங்குக்குறிப்பிட்டாக வேண்டும். 2



Antimachus I

தெமித்ரியஸ், யூகிரிதிதேஸ் ஆகியோர் ஆட்சிக்குப் பின் வடமேற்கு இந்தியாவில் கிரேக்க இளவரசர்கள் பலர் ஆட்சி புரிந்தனர். கிரேக்க நாட்டுடன், பாக்டீரியத் தொடர்பு அற்றவுடன், அதன் பிறகு அப்பகுதியைப் பற்றிய வரலாறு நமக்கு தெளிவாகக் கிடைக்கவில்லை. இறுதியாகப் போர் வீரன் மீயாண்டரைக் குறித்த செய்திகளே கிடைக்கின்றன. வடமேற்கு இந்தியாவில் உள்ள சில பகுதிகளைப் பிடித்துக் கொண்டு கி.மு. 165-130 வரை அவன் ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. அவனும் தன் தலை பொறிக்கப்பட்டுள்ள நாணயத்தை வெளியிட்டுள்ளான் 3

---

1. Ian Carradice —Ancient Greek portrait Coins. British Museum Publications Ltd. p.14.
2. Ibid page -14.
3. Ibid page -14.



Menander

மேலே குறிப்பிட்டுக் காட்டியுள்ள கிரேக்க நாணயங்களின் அடிப்படையில் தான் பிற்கால இந்தோ -கிரேக்க நாணயங்கள் உருவாகின எனலாம்.

கிரேக்க நாணய அடிப்படையில்தான் தலை வடிவ நாணயங்களை இந்திய மன்னர்கள் வெளியிட்டதாகவும் அந்த முறை கிரேக்கர்கள் இந்தியாவை விட்டுச் சென்ற பின்னரும் 800 ஆண்டுக் காலம் வழக்கிலிருந்ததாகவும் சி.ஜே.பிரௌன் கருதுகிறார். (1)

## கிரேக்கர் -தமிழர் தொடர்பு

சங்க இலக்கியத்தில் யவனரைப் பற்றிய குறிப்புக்கள் பெருவாரியாக உள்ளன. யவனரின் பாவை விளக்கு (2) , அன்ன விளக்கு (3) , கட்டுடம் (4) ஆகியவை கைவினைச் சிறப்பு மிக்க பொருள்கள் என்று போற்றப்படுகின்றன.

கிரேக்கத்திற்கும், தமிழகத்திற்கும் இடையே நடந்த பண்டைய வாணிகத் தொடர்பைச் சங்க நூல்களில் பரவலாகக் காணமுடிகிறது. யவனரின் மரக் கலங்கள் முசிறித் துறைமுகத்திற்குப் போந்து பொன்னை இறக்கி மிளகுப் பொதிகளைச் சுமந்து சென்றதையும் நாம் காண்கிறோம். (5)

இதனால் யவனர்கள் பிற நாட்டிலிருந்து போந்த வணிகர்கள் என்பது தெளிவாகிறது. இவர்கள் புகார் நகரத்திற்கு வாணிகத்தின் பொருட்டு வந்திருந்து தங்கியிருந்ததையும் நாம் காண்கிறோம். (6)

மதுரை நகரில் யவனர் வாளைக் கையில் ஏந்தி கோட்டை வாயிலைக் காவல் புரிந்து வந்ததை காணும் பொழுது (7) யவனரில் சிலர் தமிழ் நாட்டிலேயே தங்கி விட்டனர் என்பதையும், அவ்வாறு தங்கிய

---

1 The Coins of India -C.F. Brown.
2. நெடுநல் -101
3. பெரும்பாண் -316-317
4. புறம் -56-18
5. அகம் -14a
6. சிலம் -5-10
7 சிலம் -14; 66-67

வர்கள் புகார் நகரில் மாட மாளிகைகளில் வாழ்ந்ததையும், மதுரையில் கோட்டையைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததையும் காண முடிகிறது.

'யவனர்' என்ற சொல் யாரைக் குறிக்கின்றது என்பதை இங்கு காண்பது பொருத்தமுடையதாக அமையும்.

"அயோனியன் என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தான் 'யவன்' என்ற சொல் வந்தது. கிரேக்கர்களுடன் இந்தியர் தொடர்பு கி.மு.500 ஆம் ஆண்டு ஏற்பட்டிருக்கலாம் 1 என்று எஸ்.கே.சட்டர்ஜி, ஆர்.வி.இராகவன் ஆகிய அறிஞர்கள் கருதுகின்றனர்.

அறிஞர் பாண்டார்கர், 'யவனர்கள்' கிரேக்கர்களே என்று கூறியுள்ளார். 2

கிரேக்கர்கள் தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகளைத் தவிர வேறு சான்றுகள் இல்லை. வரலாற்று ஆசிரியர்கள் தமிழகத்துடன் கிரேக்கர்கள் எந்த வாணிபமும் செய்யவில்லை என்று கூறுகின்றனர்.

தமிழகத்தின் பல பகுதிகளில், தொன்மையான மௌரிய வெள்ளி முத்திரை நாணயப் புதையல்கள் கிடைத்துள்ளன. அவற்றின் காலம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு வரை அடங்கும். அதனால் அதே கால கட்டத்தைச் சார்ந்த கிரேக்க நாணயங்களும் தமிழகத்திற்கு வந்திருக்கும் வாய்ப்புக்களை ஒரேயடியாக மறுப்பதற்கில்லை.

தமிழ் மக்கள், தங்கம், வெள்ளி நாணயங்களை உருக்கி, அணிகலன்களாகச் செய்து கொள்ளும் வழக்கம் தொன்மைக் காலத்திலிருந்தே தொடர்ந்து வருவதால் அக்கால கிரேக்க வெள்ளி நாணயங்களும் உருக்கப்பட்டு இருக்கலாம் என்று கொள்வதே பொருந்துவதாக அமையும்.

கிரேக்கத் தொடர்பின் அடிப்படையில் பெருவழுதித் தலை நாணயங்களின் காலத்தைக் கணக்கிட்டால், கி.மு. 2 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலமாக இருக்கலாம் என்று கருதத் தோன்றுகிறது.

---

1 Dr. S.K. Chatterji and Dr.R.V. Ragavan -Age of Nandas and Mauryas. (Edited by K.A. Nilakanta Sastri)

2 D.R.Bhandarkar —Lectures on Ancient Indian Numismatics. p.25.

## உரோமர்களுடன் தமிழர் தொடர்பு

யவனர் தமிழர் தொடர்பு போலவே சங்க காலத் தமிழர்கள் உரோமானியர்களுடனும் தொடர்பு கொண்டிருந்தனர். கி.மு. 44 முதல்

| முன்புறம் | பின்புறம் |
|---|---|
|  Portrait of Augustus (1) |  Bull |
|  Augustus with oak wreath (2) |  Comet with light rays and a tail. |

1. Portrait type Coin of Augustus -Coin found in Kattankanni -Coimbatore District -Photo kindly provided by the Government Museum, Madras -8.

2. Portrait type Coin of Augustus with oak wreath -South India -Photo kindly provided by the Government Museum, Madras-8.

கி.பி. 323 வரை உரோமாபுரியில் அரசாண்ட அகஸ்டஸ் பேரரசன் முதல் கான்ஸ்டன்டைன் அரசன் ஈறாகவுள்ள அரசர்களின் காலத்திய உரோம நாணயங்கள் கொங்கு நாட்டிலும், மதுரையிலும் கிடைத்துள்ளமை இதற்குப் போதிய சான்றாக அமையும். இதனால் உரோம நாட்டிற்கும், தமிழகத்திற்கும் இடையே வாணிக உறவு கி.மு. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கியது என்பது உறுதியாகிறது.

பேரரசன் அகஸ்டஸ்ஸின் காலத்தில் ஆண்டிற்கு நூற்றிருபது மரக்கலங்கள் இந்தியத் துறைமுகங்களுக்கு வந்ததாகவும், அவை தென் அரேபியக் கடற்கரை ஓரமாகப் பயணம் செய்தபின், இந்தியக் கடற்கரைத் துறைமுகங்களை அடைந்தன என்றும் கருதப்படுகிறது. அகஸ்டஸ்ஸின் காலமான கி.மு. 31 -கி.பி. 14-க்கு இடைப்பட்ட காலத்தில் தான் உரோமர்கள் இந்தியாவுடன் தொடர்பு கொண்டனர் என்று டாக்டர் பி.எல்.குப்தா கருதுகின்றார்.(1)

## பெருவழுதித்தலை நாணயமும், அகஸ்டஸ் நாணயமும்.

அகஸ்டஸ்ஸின் தலை பொறிக்கப்பட்டுள்ள வெள்ளி நாணயங்கள் கோவை மாவட்டத்தில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. மதுரை மாவட்டத்திலும் சில கிடைத்துள்ளன.

அகஸ்டஸ்ஸின் தலை நாணயத்தை முன் மாதிரியாக கொண்டும் பெருவழுதித் தலை நாணயங்கள் செய்யப்பட்டு இருக்கலாம்.

அகஸ்டஸ்ஸின் தலை பொறித்த நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்தால் பெருவழுதித் தலை நாணயங்களின் காலம் கி.மு. முதல் நூற்றாண்டாக இருக்க வேண்டும்.

எனவே இதுவரை கூறியவற்றால் பெருவழுதி நாணயங்களின் காலத்தை கி.மு. 2 அல்லது கி.மு முதல் நூற்றாண்டாகக் கருதலாம் என்பது தெளிவாகிறது.

---

(1) Gupta P.L. -Roman Coins from Andhra Pradesh -page.47.

# 12. பெருவழுதி நாணயங்களின் அச்சடிப்பு முறை

இந்தியாவில் நாணயங்கள் அச்சடிப்பு பாணினி காலத்திலேயே தொடங்கி விட்டது. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டாகக் கருதப்படும் பாணினியின் அஷ்டதியாயி என்ற நூலில், முத்திரை குத்தப் பெற்ற உலோகத் துண்டுகளைப் பற்றிய மிகத் தெளிவான குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதிலிருந்து பாணினி காலத்தில் நாணயங்கள் நாடு முழுவதும் பரவியிருந்தன என்பதும், அதற்கு முந்தைய கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே நாணயங்கள் அச்சடிப்பு தோன்றி விட்டது என்று கொள்வதும் குற்றமாகாது. (1)

இந்தியாவின் எந்தப் பழைய நூலிலும் நாணயங்கள் அச்சடித்த விதம் பற்றி எந்தவிதச் செய்தியும் இல்லை. ஆனால் கௌடில்யர் எழுதிய அர்த்த சாத்திரத்தில் கள்ள நாணயக்காரர்களைப் பற்றியும், நாணயங்கள் செய்யப்பட்ட உலோகங்கள் பற்றியும் குறிப்புக்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கிடைக்கின்றன.

இப்பொழுது கிடைத்துள்ள நாணயங்களை வைத்துப் பார்த்தால் அவற்றை அச்சடிக்க மூன்று வகையான தொழில்நுட்பம் பயன்படுத்தப் பட்டுள்ளதை அறியலாம்.

முதல் முறையில் தேவையான எடையளவில் அமைந்த நாணயத் தகடுகளை நெருப்பில் காய்ச்சிப் பழுக்க வைத்து அவற்றின் மீது பல்வேறு இடங்களில் வெவ்வேறு அடையாளங்கள் கொண்ட முத்திரைகள் தனித்தனியே குத்தப்பட்டன.

இந்த முறையினால், இத்தகைய நாணயங்களுக்கு "முத்திரை நாணயங்கள்" என்ற பெயர் வழங்கி வந்தது. இந்த முறை அச்சடிப்பில் நாணய வரலாற்றின் தொடக்க நிலைக் கூறுகளை நாம் காணலாம்.

இரண்டாவது முறையில், வார்ப்பட அச்சில் நாணயங்கள் உருவாகின. இந்த முறையில் முன்பக்கமும், பின்பக்கமுமான இரண்டு வார்ப்பட அச்சுகள் ஒன்றாக ஆக்கப்பட்டு அதனுள் உலோகக் குழம்பை ஊற்றி சூடு ஆறியதும் நாணயங்களைப் பெயர்த்து எடுத்தனர்.

இந்த முறையில் பெரிய அளவில் நாணயங்களைச் செய்யத் தனித்தனியான வார்ப்பட அச்சுக்களை வரிசையாக ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைத்து அவற்றிற்குப் பொதுவான வழியை அமைத்து அதன் வழியாக உலோகக் குழம்பை ஊற்றித் தனித்தனியான வார்ப்பட அச்சுக்களுக்குக் குழம்பானது பரவிச் சென்று உறைய வழி செய்தனர். சூடு ஆறியதும், அந்த மண்ணால் செய்யப்பட்ட வார்ப்படங்களை உடைத்து நாணயங்களை மொத்தமாக வெளியில் எடுத்தனர்.

---

1. **Das Gupta K.K. A Tribal History of Ancient India -p.253.**

மூன்றாவது முறையைத் தகட்டச்சுப் பதிவில் செய்தனர். இதில் படிப்படியாக இரண்டு நிலைகள் இருந்தன. முதல் நிலையில் நாணயத் தகட்டின் ஒரு பக்கத்தில் உலோகத்தினால் செய்யப்பட்ட அச்சைக் கொண்டு இலச்சினையைப் பதித்தனர். இந்த இரட்டைத் தகட்டச்சுப் பதிவு ஒரே தகட்டச்சுப் பதிவைக் காட்டிலும் சிக்கலானது. இந்த முறையில், தகட்டின் முன்புறம், குத்த வேண்டிய அச்சை, ஓர் இரும்புச் சதுரக் கட்டியின் மேற்பரப்பில் சற்றுக் குழிவாகத் தாழ்வான பகுதியில் பொருத்தி வைப்பார்கள். இந்தத் தாழ்வான பகுதி நாணயத்தின் அமைப்பிற்கேற்பச் சதுரமாகவோ, நீளச் சதுரமாகவோ, வட்ட வடிவமாகவோ இருக்கும். தாழ்வான பகுதியில் அச்சை வைத்த பிறகு செப்புத் தகட்டை வைப்பார்கள். இந்தத் தகட்டின் மேற்பகுதியில் பின்புறம் குத்த வேண்டிய அச்சை வைப்பார்கள். அந்த அச்சைப் பிறகு சம்மட்டி கொண்டு பலமுறை அடிப்பார்கள். அச்சுக்களும் சூடு ஏற்றிய தகடும் இரும்புக் கட்டியின் தாழ்வான பகுதியில் சிக்கிக் கொள்வதால் அவை வெளிவர முடியாதபடி அதே இடத்தில் இருக்கும். பக்கவாட்டிலும் அசையாது. சிலமுறை சம்மட்டி கொண்டு அடித்த பின் சூடு ஏற்றிய செப்புத் தகட்டை வெளியில் எடுத்து விடுவார்கள். இந்தத் தகடு தான் நாணயமாகிறது. அந்தத் தகட்டின் முன்புறமும், பின்புறமும் அரசனின் இலச்சினைகள் பதிவாகியிருக்கும்.

பெரிய தகடுகளைச் சூடேற்றி அடித்து, அடித்து மெல்லியதாக்கி, பிறகு நாணயத்தின் எடைக்கும், அளவிற்கும் தக்கபடி வெட்டிச் சிறு, சிறு துண்டுகளாக்கி வைத்துக் கொண்ட பின்னரே மேலே சொன்ன அச்சடிக்கும் முறை கையாளப்படும்.

சங்ககாலப் பாண்டியர் நாணயங்களில் மேலே கண்ட மூன்று முறைகளிலும் நாணயங்கள் செய்யப்பட்டன.

வட நாட்டு மன்னர்கள் போல் சங்ககாலப் பாண்டியர்களும் வெள்ளி முத்திரை நாணயங்களை வெளியிட்டனர். அவர்கள் வெளியிட்டுள்ள வெள்ளி முத்திரை நாணயத்தின் படம் கீழே கொடுக்கப்பட்டு உள்ளது. இந்நாணயம் ஆசிரியரின் நாணயத் தொகுப்பிலுள்ளதாகும்.



முன்புறம்



பின்புறம்



முன்புறத்திலுள்ள இலச்சினைகள்



பின்புறத்திலுள்ள பாண்டியர் மீன் சின்னம்

வெள்ளி முத்திரை நாணயங்களில் பெயர் பொறிக்கப்படாததால் அவை எந்தப் பாண்டிய மன்னரால் வெளியிடப்பட்டவை என்பதை அறிய முடியாத நிலையில் உள்ளோம். ஆனால் இவை போன்ற முத்திரை நாணயங்களின் காலம் கி.மு.2 ஆம் நூற்றாண்டு என்பதைத் தயக்கமின்றிக் கூறலாம்.

மௌரியர்களின் ஆட்சி முடியும் கால கட்டத்தில் இந்த நாணயம் வெளியிடப்பட்டு இருக்கலாம் என்று டாக்டர் பி.எல்.குப்தா கருதுகிறார்.[1] மௌரியர்களின் ஆட்சி கி.மு.184 ஆம் ஆண்டு முடிவுற்றது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்து.

பெருவழுதி மன்னர்களின் நாணயங்களில் தொட்டியில் ஆமைச் சின்னம் இருப்பதைக் கண்டோம். இந்த வகை நாணயங்கள் வார்ப்பட முறையிலும், தகட்டச்சு முறையிலும் தயார் செய்யப்பட்டவை. இங்கு நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள நாணயங்களில் தகட்டு எண் I, II, III, IV ஆகிய நாணயங்கள் வார்ப்பட முறையில் வெளியிடப்பட்டவை ஆகும். இவற்றில் பெருவழுதி என்ற பெயர் பொறிப்பு இல்லை.

---

1. Gupta P.L. in his personal letter to the author.

பெருவழுதிப் பெயர்ப் பொறிப்பு நாணயங்கள் அனைத்தும் தகட்டச்சு முறையில் செய்யப்பட்டவை. செப்புக் கட்டிகளைச் சூடாக்கி ஒரே அளவிற்குத் தட்டிப் பிறகு சதுர வடிவில் வெட்டி எடுத்தனர். அச் சதுரத் தகடுகளை மீண்டும் சூடாக்கி உருகும் நிலை வருமுன், அச்சுக்கள் உள்ள பொறியில் வைத்து சம்மட்டி கொண்டு அடுத்து உருவாக்கினர்.

பெருவழுதிப் பெயர் கொண்ட நாணயங்களில், நாணய எண் ஒன்று மிக முக்கியமான நாணயமாகும். இதன் முன்புறத்தில் பெருவழுதிப் பெயர் கொண்ட அச்சு முதலில் அடிக்கப்பட்டது. அதன் பின் குதிரை அச்சு அடிக்கப்பட்டது. குதிரையின் காது, பெருவழுதி என்ற பெயரிலுள்ள 'வ' எழுத்தின் அடிப்பகுதியின் மேலே பதிவாகியுள்ளது. இதனால் இந்நாணயத்தை உருவாக்க முன்புறம் இரண்டு அச்சுக்களும், பின்புறம் ஓர் அச்சும் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பது தெளிவாகத் தெரிகிறது.

# பார்வை நூல்கள்


| | | |
|---|---|---|
| 1. | Allan John | Catalogue of the Coins of Ancient India |
| 2. | Birbal Sahani | The Technique of Casting Coins in Ancient India. |
| 3. | Bhandarkar D.R. | Lectures on Ancient Indian Numismatics |
| 4. | Brown C.Z. | The Coins of India |
| 5. | Dr.Chatterji S.K. & Dr.Ragavan R.V. | Age of Nandas and Mauryas (Edited by K.A.Neelakanda Sastri) |
| 6. | Coomaraswamy A. | History of Indian and Indonesian Art |
| 7. | Cunningham A. | Coins of Ancient India |
| 8. | Desikachari T. | South Indian Coins -1933 |
| 9. | Dr.Gupta P.L. | Roman Coins from Andhra Pradesh |
| 10. | Dr.Gupta P.L. and Hardaker T.R. | Ancient Indian Silver Punch marked coins of Magada -Maurya - Karshapana Series |
| 11. | Iravatham Mahadevan | Corpus of Tamil Brahmi Inscriptions -Seminar on Inscriptions -1966. |

| | | |
|---|---|---|
| 12. | Ian Carradice | Ancient Greek Portrait Coins<br>British Museum publication |
| 13. | Kalyankumar Das Gupta | A Tribal History of Ancient<br>India -A numismatic approach |
| 14. | Michiner, Michael. | Ancient and Classical<br>World Coins |
| 15. | Nicholas C.W. | Paleographical Development<br>of the Brahmi Script in Ceylon<br>from 3 c.B.C. to 7th c.A.D. -<br>University of Ceylon<br>Review Vol.VIII |
| 16. | Pieris P.E. | Royal Asiatic Society, Ceylon<br>Branch Vol.XXVIII 1919 |
| 17. | Dr.Pillai K.K. | தமிழக வரலாறும் பண்பாடும் |
| 18. | Dr.Raman K.V. | பாண்டியர் வரலாறு |
| 19. | Ragava Iyyengar M. | இலக்கியக் கட்டுரைகள் |
| 20. | Singh S.S. | Early Coins of North India -<br>An Iconographic Study |
| 21. | Subramaniam N. | Sangam Polity |
| 22. | Sohini S.V. | Journal of Numismatic<br>Society of India Vol.IV 1942 |
| 23. | Vanaja R. | Indian Coinage |

# பெருவழுதி நாணயங்களின் பட விளக்கம்

## தகடு I

நாணயம் 1: செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ. அகலம் 1.7 செ.மீ. எடை. 4.100 கிராம்

முன்புறம்: இந்த நாணயத்தின் முன்புறம் இடப்புறம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக்கின்றது. அக் குதிரையின் முகத்திற்குக் கீழாக இரண்டு தொட்டி கள். அத்தொட்டியில் இரண்டு ஆமைகள். குதிரை முகத்தின் அருகிலிருந்து பெருவழுதி என்ற சொல் தொடங்குகிறது. அச்சொல் தொன்மையான தமிழ் -பிராமி எழுத்து வடிவத்தில் இருமுறை பொறிக்கப்பட்டு உள்ளது.

நாணயம்: 2. செப்பு நாணயம். ஆறுபக்கங்களைக் கொண்டது. நான்கு பக்கங்கள் 1 செ.மீ. நீளமும் மற்றவை முறையே 1.3 செ.மீ. நீளமும், 0.8 செ.மீ. நீளமும் கொண்டவை. எடை. 2.900 கிராம்.

முன்புறம்: இந்த நாணயத்தின் முன்புறம் இடப்பக்கம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக்கிறது. குதிரை முகத்தின் கீழே ஒரு தொட்டியுள்ளது. தொட்டியில் ஆமை ஒன்று காணப்படுகிறது. குதிரை முகத்தின் அருகிலிருந்து பெருவழுதி என்ற சொல் தொடங்குகிறது. அச்சொல் தமிழ் -பிராமி எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

நாணயம்: 3. செப்பு நாணயம். நீளம். 1.2 செ.மீ. அகலம் 1.4 செ.மீ எடை: 3.950 கிராம்.

இடப்புறம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக் கிறது. குதிரையின் முகத்தின் கீழ் ஒரு நீண்ட சதுரத் தொட்டி, அதில் ஓர் ஆமை. குதிரை முகத்தின் மேலிருந்து பெருவழுதி என்ற சொல் தொடங்கு கிறது. அச்சொல் தமிழ்-பிராமி எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டு உள்ளது.

## தகடு II

நாணயம் 4: செப்பு நாணயம். நீளம் 1.3 செ.மீ. அகலம் 1.3 செ.மீ. எடை 3.250 கிராம்.

முன்புறம்: இந்த நாணயத்தின் முன்புறம் இடப்புறம் நோக்கி

ஒரு குதிரை நின்று கொண்டிருக்கின்றது. குதிரைத் தலையின் எதிரே இறக்கையை விரித்த பருந் தொன்றும், அதன் கீழ் அடையாளம் தெரியாத சின்னமொன்றும், குதிரைத் தலையின் கீழாக நாணயத்தின் இடப்புற விளிம்பிற்கு அருகில் பீடத்தின் மேல் யூபத்தூண் ஒன்று காணப்படுகிறது. குதிரைத் தலையின் அடியில் ஓர் ஆமையுள்ள தொட்டி ஒன்றும் காணப்படுகிறது.
இந்த நாணயத்திலும் இரண்டு முறை பெருவழுதிச் சொல் எழுதப்பட்டு இருக்க வேண்டும். பல எழுத்துக்கள் நாணயத்தில் அச்சாகவில்லை. இந் நாணயத்திலும் 'வ' என்ற எழுத்து பட்டிபேருலு முறையில் எழுதப்பட்டு உள்ளது.

நாணயம் 5: செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ. அகலம் 1.7 செ.மீ. எடை தெரியவில்லை.

முன்புறம்: இந்த நாணயத்தின் முன்புறம் இடப்புறம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக்கின்றது. குதிரை முகத்தின் எதிரே ஒரு நீண்ட சதுரத் தொட்டியில் இரண்டு ஆமைகள் உள்ளன. குதிரையின் மேல் மூன்று'டவுரின்' சின்னங்கள் உள்ளன. குதிரை முகத்தின் அருகிலிருந்து பெருவழுதி என்ற சொல் தொடங்குகிறது. அச்சொல் தொன்மை யான தமிழ் -பிராமி எழுத்து வடிவத்தில் இரு முறை பொறிக்கப்பட்டு உள்ளது. குதிரையின் வயிற் றின் கீழ் ஒரு தெளிவற்ற சின்னம் உள்ளது.

**தகடு: III**

நாணயம் 1: செப்பு நாணயம். நீளம் 1.5 செ.மீ. அகலம். 1.5 செ.மீ எடை. 4.600 கிராம்.

முன்புறம்: இடப்பக்கம் நோக்கி நிற்கும் ஒரு குதிரை. முகத்திற் கெதிரே ஒரு தொட்டி. தொட்டியில் ஒன்றை யொன்று எதிர் நோக்கியுள்ள ஆமைகளும், குதிரையின் மேல் 'டவுரின்' சின்னங்களும் அதே போன்ற ஒரு சின்னம் குதிரையின் வயிற்றின் அடியிலும் உள்ளன.

நாணயம்: 2. செப்பு நாணயம். நீளம் 1.3 செ.மீ. அகலம் 1.3.செ.மீ எடை. 3.400 கிராம்.

முன்புறம்: இடப்பக்கம் நோக்கி நிற்கும் ஒரு குதிரை.

குதிரையின் மேல் 'டவுரின்' சின்னங்களும், மீன் சின்னங்களும் கலந்து காணப்படுகின்றன. குதிரையின் வயிற்றின் கீழ் மற்றொரு 'டவுரின்' சின்னம் காணப்படுகிறது.

நாணயம்: 3. செப்பு நாணயம். நீளம். 1.5 செ.மீ. அகலம் 1.5 செ.மீ எடை. 3.900 கிராம்.

முன்புறம்: இடப்பக்கம் நோக்கி நிற்கும் ஒரு குதிரை. குதிரைத் தலையின் கீழ் ஒரு தொட்டி. அதில் இரண்டு ஆமைகள் உள்ளன. குதிரையின் மேல் பல தெளிவற்ற சின்னங்கள்.

தகடு. IV

நாணயம்: 1. செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ. அகலம் 1.7 செ.மீ. எடை. 7.100 கிராம்.

முன்புறம்: நாணயத்தின் கீழ்ப் பகுதியில் ஒரு தொட்டியும், அதனுள் ஒன்றையொன்று எதிர் நோக்கியுள்ள நான்கு ஆமைகளும் உள்ளன. நான்கு ஆமைகளில் மூன்றின் உருவங்கள் தெளிவாக உள்ளன. தொட்டியின் மேல் யானை உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. நாணயத்தின் இடப்பக்கம் வேலியிட்ட மரம் தலை கீழாய் உள்ளது.

நாணயம்: 2. செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ. அகலம் 1.7செ.மீ. எடை. 5.500 கிராம்.

முன்புறம்: நாணயத்தின் கீழ்ப்பகுதியில் ஒரு தொட்டியும், அதில் ஒன்றையொன்று எதிர்நோக்கியுள்ள நான்கு ஆமைகளில் மூன்றை மட்டுமே காணமுடிகின்றது. தொட்டியின் மேல் ஒரு யானை வலப்பக்கம் நோக்கி நிற்கிறது. நாணயத்தின் இடப்பக்கத் தலைப்பகுதியில் வேலியிட்ட மரத்தின் தொட்டி மட்டும் தெரிகிறது. தொட்டியின் கீழே எட்டு புள்ளிகள் உள்ளன.

நாணயம்: 3. செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ. அகலம் 1.7செ.மீ. எடை: 6.500 கிராம்.

முன்புறம்: நாணயத்தின் கீழ்ப்பகுதியில் இடப்பக்கத்தில் உள்ள

*தொட்டியில் நான்கு ஆமைகள் உள்ளன. தொட்டியின் மேல் வளைந்த கொம்புடைய யானை நிற்கிறது. வலப்பக்கத்தில் வேலியிட்ட மரம் உள்ளது.*

**தகடு V**

**நாணயம்.4:** *செப்பு நாணயம். நீளம்1.7செ.மீ. அகலம். 1.7 செ.மீ எடை. 5.200 கிராம்.*

**முன்புறம்:** *நாணயத்தின் கீழ்ப்பகுதியில் ஒரு தொட்டியும், அதில் ஒன்றையொன்று எதிர் நோக்கிய நான்கு ஆமைகளும் தெரிகின்றன. தொட்டியின் மேல் யானை உள்ளது. யானையின் இடப்பக்கம் ஆறு புள்ளிகளும், அப்புள்ளிகளின் மேல் பகுதியில் தெளிவில்லாமல் சில கோடுகளும் உள்ளன. யானையின் மேல் 'டவுரின்' சின்னம் உள்ளது. நாணயத்தின் வலப்பக்கம் வேலியிட்ட மரம் தெரிகின்றது.*

**நாணயம்.5:** *செப்பு நாணயம் நீளம் 1.4 செ.மீ. அகலம் 1.2 செ.மீ எடை: 4.300 கிராம்.*

**முன்புறம்:** *நாணயத்தின் இடப்பக்கத்தில் ஒரு தொட்டியும் அதில் இரண்டு ஆமைகளும், அதன் மேல் ஒரு யானையும் உள்ளன. நாணயத்தின் வலப்பக்கத்தில் வேலியிட்ட மரமும் அதன் மேலே 'டவுரின்' இலச்சினையும் காணப்படுகின்றன.*

**நாணயம்.6:** *செப்பு நாணயம். நீளம் 1.5 செ.மீ.அகலம் 1.3 செ.மீ. எடை 3.800 கிராம்.*

**முன்புறம்:** *நாணயத்தின் இடப்பக்க அடிப்பகுதியில் மூன்று வளைவுள்ள முகடும், அதற்கு மேல் 'டவரின்' சின் னமும், அதன்மேல் பாண்டியரின் கோட்டு வடிவு மீன் சின்னமும், அதன் மேலே 'டவரின்' சின்னமும் உள்ளன. நாணயத்தின் வலப்பக்கத்தில் ஒரு தொட் டியில் இரண்டு ஆமைகள் உள்ளன. தொட்டியின் மேல் ஒரு யானை உள்ளது.*

**தகடு: VI**

**நாணயம்: 7.** *செப்பு நாணயம். நீளம்.1.5 செ.மீ. அகலம். 1.3 செ.மீ. எடை. 3.800 கிராம்.*

**முன்புறம்:** *நாணயத்தின் கீழ்ப் பகுதியில் உள்ள ஒரு தொட்டியில் இரண்டு ஆமைகள் உள்ளன. தொட்டியின் மேல் வலப்பக்கம் நோக்கும் ஒரு யானை உள்ளது. இடப் பக்கம் மேற்பகுதியில் ஒரு குடைச் சின்னமும் யானையின் துதிக்கையின் கீழ் ஒரு ''டவுரின்'' சின்னமும் உள்ளன.*

நாணயம்.8: *செப்பு நாணயம். நீளம். 1.7 செ.மீ. அகலம் 1.8செ.மீ எடை. 6.200 கிராம்*

முன்புறம்: *தொட்டியின் மேல் யானை. தொட்டியில் இரண்டு ஆமைகள் மட்டும் தெரிகின்றன. மீதியுள்ள இரண்டு ஆமைகள் அச்சாகவில்லை. யானையின் முன்பு வேலியிட்ட மரம். யானையின் மேல் 'டவுரின்' இலச்சினைகள் உள்ளன. அதன் மேல் வலக் கோடியில் மூன்று வளைவுகள் உள்ள முகட்டின் ஒரு பகுதியை மட்டும் காண்கிறோம்.*

நாணயம்.9: *செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ. அகலம். 2 செ.மீ. எடை 8.200 கிராம்.*

முன்புறம்: *நாணயத்தின் இடப்புறமையத்தில் உள்ள தொட்டியில் நான்கு ஆமைகள் உள்ளன. தொட்டியின் கீழ் ஒரு கொம்பன் யானை வலப் பக்கம் நோக்கி நிற்க, அதன் எதிரில் வேலியிட்ட மரம் உள்ளது. நாணயத்தின் தலைப்பகுதி வலக் கோடியில் மூன்று வளைவுள்ள முகடு ஒன்று காணப்படுகிறது.*

தகடு: VII

நாணயம். 10: *செப்பு நாணயம் நீளம் 1.6 செ.மீ. அகலம் 1.6 செ.மீ. எடை. 7.800 கிராம்.*

முன்புறம் *நாணயத்தின் முன்புறத்தில் வலப்பக்கம் நோக்கி நிற்கும் ஒரு யானையும், யானைக்கு மேலாக இடப் பக்கத் தொட்டியில் ஓர் ஆமையும், நாணயத்தின் வலப்பக்க மேற்பகுதியில் வேலியிட்ட மரமும், வலப்பக்கக் கீழ்ப்பகுதியில் மூன்று வளைவு முகட் டின் ஒரு பகுதியும் காணப்படுகின்றன.*
*யானையின் கீழ் மூன்று 'டவுரின்' இலச்சினைகள் உள்ளன.*

நாணயம். 15: *செப்பு நாணயம். நீளம் 1.6 செ.மீ. அகலம் 1.8 செ.மீ. எடை: 8.500 கிராம்.*

முன்புறம்: *நாணயத்தின் மையமாக ஒரு யானை உள்ளது. யானையின் கொம்புகள் வளைந்து மிகப் பெரிதாக உள்ளன. நாணயத்தின் இடப்புற மேற்பகுதியில் ஒரு தொட்டியும், அதில் ஓர் ஆமையும் உள்ளன. நாண யத்தின் வலப்பக்கக் கீழ்ப்பகுதியில் மூன்று வளை வுள்ள முகட்டின் ஒரு பகுதி மட்டும் தெரிகிறது.*

நாணயம்:16. செப்பு நாணயம். நீளம் 1 செ.மீ. அகலம் 1 செ.மீ. எடை: 2 கிராம்

முன்புறம்: நாணயத்தின் இடப்பக்கக் கீழ்ப்பகுதியில் மூன்று வளைவுள்ள முகடும், அதன் வலப்பக்கத்தில் ஒரு தொட்டியும் அதில் ஓர் ஆமையும் உள்ளன. நாணயத்தின் மையப்பகுதியில் ஒரு சதுர பீடத்தில் சிவலிங்கம் ஒன்று உள்ளது. சிவலிங்கத்தின் அருகில் ஒரு மீன் சின்னமும் இரண்டு 'டவுரின்' சின்னங்களும் உள்ளன. நாணயத்தின் மேற்பகுதியில் வலமிருந்து இடமாக தெளிவற்ற வேலியிட்ட மரம் உள்ளது.

## தகடு VIII

நாணயம்: 17. செப்பு நாணயம். நீளம் 1 செ.மீ. அகலம் 1 செ.மீ. எடை: 1.600 கிராம்

முன்புறம்: இடப்புறம் வேலியிட்ட மரம். வலப்புறத் தொட்டியில் ஓர் ஆமை, மேற்பகுதியில் கோட்டு வடிவில் மீன் சின்னம். அதன் கீழ் மற்றொரு மீன் சின்னம். வலப்புறத் தொட்டியின் மேல் உள்ள சதுரத் தொட்டியின் நடுவில் சிவலிங்கம்.

நாணயம். 18. செப்பு நாணயம். நீளம் 0.25 செ.மீ. அகலம் 0.60 செ.மீ. எடை: 0.750 கிராம்.

முன்புறம்: நாணயத்தின் வலப்பக்கம் பெரிய தொட்டியும், அதில் ஒரு பெரிய ஆமையும் உள்ளன. கீழ்ப்பகுதியின் இடக் கோடியில் மூன்று வளைவுள்ள முகட்டின் ஒரு பகுதியை மட்டும் காண்கிறோம். அதன் மேல் 'டவுரின்' இலச் சினைகள் உள்ளன.

## தகடு IX

நாணயம்: 19. செப்பு நாணயம். நீளம் 1 செ.மீ. அகலம் 0.25 செ.மீ. எடை: 0.500 கிராம்.

முன்புறம்: தொட்டியில் ஓர் ஆமை. வேறு சின்னங்கள் ஏதும் இல்லை.

நாணயம்: 20. செப்பு நாணயம். நீளம். 2.2. செ.மீ. அகலம். 2 செ.மீ எடை: 10.200 கிராம்.

முன்புறம்: நாணயத்தின் மையத்தில் உள்ள வட்டத் தொட்டியில் ஓர் ஆமை உள்ளது. இடப்பக்க மேற்பகுதியில் சங்கும், வலப்பக்க மேற்பகுதியில் ஆறு வளைவுள்ள முகடும், இடப்பக்க அடிப்

பகுதியில் யானைச் சின்னமும், வலப்பக்க அடிப் பகுதியில் நீண்டு வளைந்த கொம்புடைய எருதும் காணப்படுகின்றன.

## தகடு X

**நாணயம்:1** செப்பு நாணயம். நீளம், அகலம், எடை தெரியவில்லை.
முன்புறம்:மேல்வரிசை: இடப்புறம் வேலியிட்ட மரம் -வேலியில் கடல் ஆமைச்சின்னம் பொறிக்கப் பட்டுள்ளது. நடுப்பகுதி -கோயில் சின்னத்தின் அடிப்பகுதி. வலக்கோடி -மூன்று முகடுள்ள மலைச் சின்னம்.
கீழ்வரிசை: இடப்புறம் கொடிமரம் -நடுப்பகுதி யானை. வலக்கோடி -வேலியிட்ட மரம் - வேலியில் கடல் ஆமைச்சின்னம் காணப்படுகிறது.

**நாணயம்:2.** செப்பு நாணயம். நீளம், அகலம் எடை தெரிய வில்லை.
முன்புறம்: மேல்வரிசை:
1. இடப்புறம்: மூன்று முகடுள்ள மலைச்சின்னம்.
2. நடுப்பகுதி: கவிழ்ந்த பிறை வடிவுடைய கூரைக் கோயில். கூரையை ஐந்து தூண்கள் தாங்கி நிற்கின்றன.
3. வலக்கோடி: வேலியிட்ட மரம். சின்னம் தெளிவாக இல்லை.

கீழ்வரிசை:
1. இடப்பக்கம்: கொடிக்கம்பம்.
2. நடுப்பகுதி: யானைச்சின்னம்.
3. வலக்கோடி: திரிசூலம். சூலத்தின் தண்டில் ஒரு வெட்டரிவாள் உள்ளது. சூலத்தைத் தாங்கி நிற்கும் பீடத்தில் கடல் ஆமைச் சின்னம் காணப்படுகிறது.

**நாணயம்: 3.** செப்பு நாணயம். நீளம், அகலம், எடை தெரியவில்லை.
முன்புறம்: மேல்வரிசை:
1. இடப்புறம்: வேலியிட்ட மரம். மரத்தில் ஓர் இலை மட்டும் உள்ளது. வேலியில் கடல் ஆமைச் சின்னம் தெளிவாகத் தெரியவில்லை.
2. நடுப்பகுதி: கவிழ்ந்த பிறை வடிவிலுள்ள கூரைக் கோயில். கூரையை நான்கு தூண்கள் தாங்கி

நிற்கின்றன.

3. வலப்புறம்: மூன்று வளைவுள்ள முகடு. அதன் மேல் வேலியிட்ட மரம். மரத்தில் மூன்று இலைகள் உள்ளன.

கீழ்வரிசை:

1. இடப்புறம்: வலப்புறம் நோக்கி நிற்கும் ஒரு குதிரை.
2. வலக்கோடி: இடப்புறம் நோக்கி நிற்கும் ஒரு யானை.

தகடு XI

நாணயம்: 4 செப்பு நாணயம். நீளம், அகலம், எடை தெரியவில்லை.

முன்புறம்: மேல்வரிசை:

1. இடப்புறம்: மூன்று வளைவுள்ள முகடு.
2. நடுப்பகுதி: கவிழந்த பிறை வடிவுள்ள கூரைக் கோயில். கூரையை ஐந்து தூண்கள் தாங்கி நிற்கின்றன.
3. வலப்புறம்: மூன்று முகடுள்ள மலை. அதன் மேல் வேலியிட்ட மரம்.

கீழ்வரிசை:

1. இடப்புறம்: கொடி மரம்
2. நடுப்பகுதி: யானை
3. வலக்கோடி: வேலியிட்ட மரம். (தெளிவாக இல்லை)

நாணயம்: 5 செப்பு நாணயம் நீளம்: 1.6 செ.மீ. அகலம்: 1.6 செ.மீ. எடை: 7.7 கிராம்.

முன்புறம்: மேல்வரிசை:

1. இடப்புறம், மூன்று வளைவுள்ள முகடு.
2. நடுப்பகுதி: கோயிலின் மையப்பகுதி. ஐந்து தூண்கள் தெரிகின்றன.
3. வலக்கோடி: மூன்று முகடுள்ள மலை. அதன் மேல் வேலியிட்ட மரம் உள்ளது.

கீழ்வரிசை:

1.இடப்புறம்: கொடி மரம்
2. நடுப்பகுதி: யானை.
3. வலக்கோடி: வேலியிட்ட மரம் (அடி வளைவுள்ள தொட்டியில் மரக்கிளைகள் உள்ளன.)

நாணயம்: 6 செப்பு நாணயம். நீளம், அகலம், எடை தெரிய வில்லை.

முன்புறம்: மேல்வரிசை:
1. இடப்புறம்: மூன்று வளைவுள்ள முகடும், அதன் மேல் பிறை வளைவும் உள்ளன.
2. நடுப்பகுதி: கவிழ்ந்த கூரையுடைய கோயில். பல தூண்கள் அக்கூரையைத் தாங்கி நிற்கின்றன.
3. வலக்கோடி: மூன்று வளைவுள்ள முகடு. அதன் மேல் வேலியிட்ட மரச்சின்னத்தின்
தொட்டிப்பகுதி மட்டுமே உள்ளது.
கீழ்வரிசை:
1. இடப்புறம்: கொடி மரம்
2. நடுப்பகுதி: யானை.
3. வலக்கோடி: வேலியிட்ட மரம்.

தகடு XII

நாணயம்: 1 செப்பு நாணயம். நீளம் 2 செ.மீ அகலம் 2செ.மீ எடை: 5.700 கிராம்.
முன்புறம்: இதன் முன்புறத்தில் இடப்பக்கம் ஒரு குதிரை நின்று கொண்டிருக்கிறது. அதன் மேல் வேலியிட்ட மர வடிவம் ஒன்று உள்ளது.
குதிரையின் முன்னே யூபத்தம்பம். தம்பத்தில் மூன்று வளைந்த அடுக்குகள் உள்ளன. வலப்பக்க நடுவில் யாக குண்டத்தின் ஒரு பகுதி காணப்படுகிறது. குதிரையை யூபத்துாணுடன் பிணைத்து, அதன் பின் அக்கயிற்றை வேள்விக் குண்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

நாணயம்: 2 செப்பு நாணயம். நீளம் 1.7 செ.மீ அகலம்1.7செ.மீ எடை: 6.700 கிராம்.
முன்புறம்: இந்நாணயத்தின் முன்புறத்தில் இடப் பக்கம் ஒரு குதிரை நின்று கொண்டிருக்கிறது. அதன் மேல் வேலியிட்ட மரத்தின் ஒரு பகுதி மட்டும் தெரிகிறது.
குதிரையின் முன் யூபத்தம்பம் நிற்கிறது. தம்பத்தில் குடை போன்ற மூன்று வளைவுகள் உள்ளன. நாணயத்தின் வலப்பகுதியில் வேள்விக் குண்டமும் அதன் மேல் மூன்று வளைவுள்ள முகடும் உள்ளன. குதிரையின் காலில் ஒரு கயிறு கட்டப்பட்டு அக்கயிறு யூபத்துாணுடன்
பிணைக்கப்பட்டு, மூன்று வளைவுள்ள முகட்டுடனு இணைக்கப்பட்டு உள்ளது.

நாணயம்: 3 செப்பு நாணயம். நீளம் 2 செ.மீ அகலம் 1.7 செ.மீ எடை 5.700 கிராம்.
முன்புறம்: இடப்பக்கம் ஒரு குதிரை நின்று கொண்டிருக்கிறது. அதன் எதிரே யூபத்தம்பம். தம்பத்தில் ஒரு குடை வளைவு மட்டும் உள்ளது.

வலப்பக்கம் கீழ்ப்பகுதியில் நந்திபாதம். அதன் மேல் ஆறு பக்கம் உள்ள யாககுண்டமும் அதற்கு மேலாக மூன்று வளைவுள்ள முகட்டின் அடிப்பகுதியும் காணப்படுகின்றன.

**தகடு XIII**

**நாணயம்: 1** செப்பு நாணயம்.: நீளம் 1.5 செ.மீ. அகலம் 1.5 செ.மீ. எடை: 2.800 கிராம்.
முன்புறம்: இடப்பக்கத்தில் யூபத்தம்பமும், அத் தம்பத்தில் குடை வளைவிற்குப் பதிலாக நீண்ட சதுர வடிவத்தைக் காண்கிறோம். வலப்பக்கத்தில் ஒரு குதிரை யூபத்தம்பத்தை நோக்கி நின்று கொண்டிருக்கிறது.

**தகடு XIV**

**நாணயம்: 1** செப்பு நாணயம். நீளம், அகலம், எடை தெரியவில்லை.
முன்புறம்: மன்னரின் தலைவடிவம் வலப்பக்கம் நோக்கியுள்ளது. சுருண்ட முடி. மன்னரின் மூக்கு கூர்மையான நுனியுடன் நீண்டு காணப்படுகிறது. தடித்த மேல் உதடு. முகத்தில் நடுத்தர வயதின் தோற்றம். தலை வடிவத்தைச் சுற்றிலும் முத்துப் பரல் வட்டம்.

**நாணயம்: 2** செப்பு நாணயம். நீளம், அகலம், எடை தெரியவில்லை.
முன்புறம்:முன்புறம் மன்னரின் தலைவடிவம் வலப் பக்கம் நோக்கியுள்ளது. மன்னரின் மூக்கு கூர்மை யான நுனியுடன் நீண்டு காணப்படுகிறது. முகத்தில் முதிர்ச்சியின் தோற்றம் தெரிகிறது.

**நாணயம்: 3** செப்புச் சதுர நாணயம். நீளம் 1.6 செ.மீ. அகலம். 1.6 செ.மீ. எடை: 6.300 கிராம்.
முன்புறம்: மன்னரின் தலைவடிவம் வலப்பக்கம் நோக்கியுள்ளது. தலையைச் சுற்றித் தெளிவற்ற வட்ட வடிவமான சுற்றுப்பட்டை போன்ற அமைப்பு காணப்படுகிறது.

தலையின் பின் பக்கத்தில் அணிகலன்களால் ஆகிய முடிச்சொன்று காணப்படுகிறது. மன்னரின் மூக்கு கூர்மையான நுனியுடன் நீண்டு காணப் படுகிறது. கண் உள்ளடங்கியும், உதடுகள் பெரிதாகவும் உள்ளன.

# தகடு I

| புகைப்படம் | | வரைபடம் |
| --- | --- | --- |
|  | 1 |  |
|  | 2 |  |
|  | 3 |  |

# தகடு II

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 4 |  |
|  | 5 |  |

# தகடு III

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 1 |  |
|  | 2 |  |
|  | 3 |  |

# தகடு IV

| புகைப்படம் | | வரைபடம் |
| --- | --- | --- |
|  | 1 |  |
|  | 2 |  |
|  | 3 |  |

# தகடு V

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 4 |  |
|  | 5 |  |
|  | 6 |  |

# தகடு VI

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 7 |  |
|  | 8 |  |
|  | 9 |  |

# தகடு VII

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 10 |  |
|  | 15 |  |
|  | 16 |  |

# தகடு VIII

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 17 |  |
|  | 18 |  |

# தகடு IX

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 19 |  |
|  | 20 |  |

# தகடு X

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 1 |  |
|  | 2 |  |
|  | 3 |  |

# தகடு XI

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 4 |  |
|  | 5 |  |
|  | 6 |  |

# தகடு XII

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 1 |  |
|  | 2 |  |
|  | 3 |  |

# தகடு XIII

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 1 |  |

# தகடு XIV

| புகைப்படம் | | வரைபடம் |
|---|---|---|
|  | 1 |  |
|  | 2 |  |
|  | 3 |  |



இரா.கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்
2. தமிழ் வட்டெழுத்து
3. சேரநாட்டில் தமிழ் வட்டெழுத்து
4. பிற்காலத் தமிழ் வட்டெழுத்து
5. சங்ககாலச் சோழர் நாணயங்கள்

17